கார் நாற்பது - களவழி நாற்பது

அம்சவேணி பெரியண்ணன் உரை

கார் நாற்பது
களவழி நாற்பது

அம்சவேணி பெரியண்ணன் உரை

(மூலமும் - எளிய உரையும்)

அம்சவேணி பெரியண்ணன் M.A.,

வனிதா பதிப்பகம்

11, நானா தெரு, தியாகராய நகர்,
சென்னை-600 017. ☎ 044-42070663

கார் நாற்பது-களவழி நாற்பது அம்சவேணி பெரியண்ணன் உரை ❒ அம்சவேணி பெரியண்ணன் ❒பதிப்பு 2019 ❒ பக்கங்கள்: 72 ❒ வெளியீடு: வனிதா பதிப்பகம், எண். 11, நானா தெரு, தி.நகர், சென்னை-17. ❒ தொலைபேசி: 42070663 ❒ ஒளி அச்சு: லதா கம்பியூட்டர், சென்னை. ❒ அச்சிட்டோர்: பத்மாவதி ஆப்செட், சென்னை.

விலை: ரூ.65.00

பதிப்பாளர்: டாக்டர்.பெ.மயிலவேலன்,
M.Sc., M.Ed., M.Phil.,Ph.D.

எச்சரிக்கை

காப்பிரைட் சட்டத்தின்கீழ் பதிவு பெற்றுள்ள இந்நூலில் இருந்து எப்பகுதியையும் முன் அனுமதியின்றிப் பிரசுரிக்கக்கூடாது. தவறினால் சிவில், கிரிமினல் சட்டங்களின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

டாக்டர். பெ. மயிலவேலன், M.Sc., M.Ed., M.Phil.,Ph.D.

Copyright Warning: No part of this book may be reproduce or transmitted in any form or by any means electronic or mechanical including photocopying or recording or by any information storage and retrieval system without permission in writing from **Dr. P. MAILAVELAN, M.Sc., M.Ed., M.Phil.,Ph.D. Chennai.**

Any violations of these conditions, legal action will be initiated in civil and criminal proceedings under the Copyright Act 1957.

KARNARPADHU–KALAVAZHINARPADHU HAMSAVENI PERIANNAN URAI ❒ **HAMSAVENI PERIANNAN** ❒ Edition: 2019 ❒ Pages: 72 ❒ Published by: Vanitha Pathippagam, No.11, Nana Street, Pondy Bazaar, T.Nagar, Chennai-17 ❒ Phone: 42070663 ❒ Typeset: Latha Computer, Chennai ❒ Printed at: Padmavathi Offset, Chennai.

Price: **Rs. 65.00**

Publisher: Dr. P. MAILAVELAN,
M.Sc.,M.Ed.,M.Phil.,Ph.D.

பதிப்புரை

இரண்டு அடிகள் முதல் எட்டு அடிகள் வரை பாடப் பெற்றவை கீழ்க்கணக்கு நூல்களாகும்.

கீழ்க்கணக்கு நூல்கள் அனைத்துமே வெண்பாக்கள். குறள் வெண்பா, சிந்தியல் வெண்பா; நேரிசை வெண்பா; இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா ஆகிய வெண்பாக்களால் யாக்கப் பெற்றவை.

"நாலடி நான்மணி நால்நாற்ப தைந்திணைமுப்
பால்கடுகம் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைசொல் காஞ்சியோ டேலாதி என்பவே
கைந்நிலைய வாம்கீழ்க் கணக்கு."

கீழ்க்கணக்கு நூல்கள் பதினெட்டு

1. நாலடியார், 2. நான்மணிக்கடிகை, 3. இன்னா நாற்பது, 4. இனியவை நாற்பது, 5. கார்நாற்பது, 6. களவழி நாற்பது, 7. அய்ந்திணை அய்ம்பது, 8. அந்திணை எழுபது, 9. திணைமொழி அய்ம்பது, 10. திணைமாலை நூற்றைம்பது, 11. கைந்நிலை (இன்னிலை), 12. திருக்குறள், 13. திரிகடுகம், 14. ஆசாரக்கோவை, 15. பழமொழி நானூறு, 16. சிறுபஞ்சமூலம், 17. முதுமொழிக் காஞ்சி, 18. ஏலாதி ஆகியவை.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்கள் கி.பி. எட்டாம் நூற்றாண்டைச் சேர்ந்தவர்கள். இதில் திருக்குறள் முதல் நூற்றாண்டைச் சேர்ந்தவையாகும். திருக்குறளுக்கு முப்பால் என்ற பெயர்தான் அப்பொழுது வழங்கப் பெற்றன.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் கார் நாற்பது-களவழி நாற்பது என்னும் நூல் மிகவும் எளிமையாகவும், இனிமையாகவும் அம்சவேணி பெரியண்ணன் அவர்கள் உரை எழுதி யுள்ளார். இவர் தமிழகத்தின் முதல் பெண் பதிப்பாளராக 3000க்கும் மேற்பட்ட நூல்களை பதிப்பித் துள்ளார்.

இந்நூல் கடல் நீரை வடிக்கட்டி குவளையில் கொடுக்கப் பெற்றுள்ளது. கரும்பைக் கசக்கிப் பிழிந்து வெல்லக் கட்டியாக்கித் தரப்பெற்றுள்ளது. சுவைப்பீர்! பயன் பெறுவீர்!!

❑ ❑ ❑

கார் நாற்பது
களவழி நாற்பது

விளக்கவுரை

பூமாலை போன்ற வானவில்

பொருகடல் வண்ணன் புனைமார்பில் தார்போல்
திருவில் விலங்(கு)ஊன்றித் தீம்பெயல் தாழ
வருதும் எனமொழிந்தார்; வாரார்கொல்? வானம்
கருஇருந்(து) ஆலிக்கும் போழ்து. 1

விளக்கவுரை

திருமாலின் திருமார்பில் விளங்கும் மாலை போல் வானவில் தோன்றி மழை பொழியும் போது வருவேன் என்றார் தலைவி. இப்போது அந்த கார்காலம் தோன்றி விட்டது. ஆகவே, தலைவர் வந்திடுவார் என்று தோழி தலையை ஆறுதல் படுத்துவதாக இப்பாடல் புனையப் பட்டுள்ளது.

கரையை மோதும் கடல் அலையினது நிறத்தை யுடைய திருமால் மார்பில் அணிந்த பூமால போல் வானில் வானவில் தோன்றி விட்டது. மழையும் பொழிய ஆரம்பித்து விட்டது. இந்த காலத்தில்தான் தலைர் வருவேன் என்று கூறினார். ஆகவே, நிச்சயமாக அவர் வந்து விடுவார். வருந்த வேண்டாம் என்று தோழி தலைவியிடம் கூறுவதாக இப்பாடல் புனையப் பட்டுள்ளது.

அருஞ்சொற்பொருள்

திருவில்-வானவில். விலங்கு-குறுக்கு. பொருவில்-வினைத் தொகை. தாழ-வினையெச்சம். வருவார்-குறிப்பால் கொண்டது.

தலைவர் விடுத்த மின்னல் தூது

கடுங்கதிர் நல்கூர்க், கார்சொல்வம் எய்த,
நெடுங்காடு நேர்சினை ஈனக்,-கெடுங்குழாய்!
இன்னே வருவர் நமரென்(று) எழில்வானம்
மின்னும் அவர்தூ(து) உரைத்து. 2

விளக்கவுரை

கோடைக் காலம் கழிகிறது. கார்காலம் வருகிறது. அக்காலத்தில் மலரும் பூக்கள் மலர்ந்துள்ளன. இந்த காலத்தில் தலைவர் வருவேன் என்று கூறினார் அவர் விடுத்த தூது போல் மின்னலும் மின்னுகிறது என்று தோழி தலைவிக்கு ஆறுதல் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது.

வளைந்து தொங்குகின்ற குழையை அணிந்தவளே. சூரிய வெப்பம் தணிந்து கார்காலம் வந்து விட்டது. பரந்த காடு முழுவதும் அரும்புகள் மலராக பூத்துள்ளன. கரிய மேகத்தினையுடைய வானம் நம் தலைவர் இப்போதே வந்திடுவார் என்று கூறுவது போல் மின்னல் மின்னுகிறது. தலைவர் அனுப்பிய தூதுதான் இந்த மின்னல் என்று தோழி நம்மாக இந்த இயற்கை காட்சிகளைக் கூறி தலைவிக்கு ஆறுதல் கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

கடுங்கதிர்-சூரியன். அன்மொழித்தொகை. கொடுமை-வளைவு கொடுவாள் என்பது போல. வளைவு-இங்கு வளைந்து தொங்கலைக் குறித்தது. குழை-ஒருவகைத் காதணி. நேர்-மிகுதி. எழில்-அழகு. எழுச்சி.

தோழியின் ஆற்றாமை

வரிநிறப் பாதிரி வாட, வளிபோழ்ந்(து)
அயிர்மணல் தண்புறவின் ஆலி-புரள,
உரும்இடி வானம் இழிய, எழுமே
நெருநல் ஒருத்தி. 3

விளக்கவுரை

பாதிரிப்பூக்கள் வாழவிட்டன. ஆலங்கட்டி மழை விழுகிறது. இடியோடு வானம் நேற்று முதல் மழை பொழிகிறது. இந்த காட்சிகள் எல்லாம் தலைவன் வருவேன் என்று சொன்ன நேரம் இதனைக் கண்டு தலை மேலும் வருந்துவாளே என்று என்ன செய்வது? என்று புரியாமல் தோழி தன் ஆற்றாமையை வெளிப்படுத்துவதாக இப்பாடல் உள்ளது.

தலைவன் மேல் தலைவிக்கு உள்ள கவர்ச்சி. தலைவி மேல் தலைவனுக்குள்ள கவர்ச்சி தோழியின் ஆற்றாமை இவைகைள இவ்விலக்கியத்தின் ஆசிரியர் மதுரை கண்ணங் கூத்தனார் இயற்கை வர்ணனைகளோடு கூறுகிறார். இதை வாசிப்பதால் மனித சமுதாயத்திற்கு என்ன நன்மை? என்கிற வினை எழுப்பி விளக்கவுரை தருவதே இந்நூலுக்கான தனிசிறப்பு என்பதை வாசக அன்பர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம். இயற்கை வர்ணனைகள் அலை பாயும் நம் மனத்தை ஒன்று படுத்துகிறது. அதாவது ஒரு நிலையில் நிறுத்துகிறது. இது பழக, பழக அந்த மனத்திற்கு சிங்கத்தின் வலிமை வரும். அந்த இயற்கைக்கு பின்னால் தெய்வீகம் இருக்கிறது. அதனால், தான் கவிஞனின் வர்ணனை செய்ய வைக்கிறது. அதைப் படிப்போர்க்கு மன ஒருமைப்பாடு வருகிறது. இந்த சிந்தனையோடு இவ்விலக்கியத்தை வாசித்தல் வேண்டும் பாதிரிப்பூ வாழவிட்டது. மழை பொழிகிறது. கார் காலத்தில் வருவேன் என்று சொல்லி தலைவர் வரவில்லை என்று தலையும், தோழியும் கவலை கொள்கிறார்கள். தலைவிக்கு தலைவன் மேல் இந்த பற்று, மோகம், அன்பு எதனால் வருகிறது. அவன் இளமை தேகம் கண்டார் ஒருக்காலும் இல்லை அந்த தலைனுக்குள்ளே இருக்கும். தெய்வீகம் தலையை கவர்ந்திழுக்கிறது. அதேபோல் தலைவியிடம் தலைவன் காட்டும் அன்பு, மோகம் என்ற வெறும் உடல் அழகை வைத்தல்ல. அந்த தலைவிக்குள்ளே இருக்கும் தெய்வீகமே தலைவனை இழுக்கிறது. கவர்கிறது.

இந்த கவர்ச்சியை வெறும் காம மயக்க மாக்கி சக்தியை வீணடித்து விடாமல் அளவோடு இல்லறம் சுகம் கண்டு அந்த சக்தியை வேறு நல்ல செயல்களுக்கு திருப்பி விட வேண்டும. கார் நாற்பது விளக்கவுரை எழுந்ததன் மூலகாரணம் இதுவே. இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

பாதிரி-இது இளவேனிற் பூ வெண்மை, பொன்மை, மயங்கிய செம்மை போன்ற நிறங்களில் இது இருக்கும். போழ்தல்-ஊடே அறுக்கப்படல். அயிர் மணல்-நுண்மணல், இளமணல். ஆலி-ஆலங்கட்டி நீர் திரண்ட பனிக்கட்டி (பனிக்கட்டி).

தலைவன் வருகையே பசலைக்கு மருந்து

ஆடு மகளிரின் மஞ்ஞை அணிகொளக்,
காடும் கடுக்கை கவின்பெறப் பூத்தன;
பாடுவண்(டு) ஊதும் பவருவம்; பணைத்தோளி!
வாடும் பசலை மருந்து. 4

விளக்கவுரை

மயில்கள் ஆடுகின்றன. கொன்றைப் பூக்கள் பூத்துக் குலுங்குகின்றன. வண்டுகள் ரீங்காரமிட்டு பாடுகின்றன. இந்த அடையாளங்கள் கார்காலம் வந்ததை அறிவித்தது. ஆகவே, தலைவர் நிச்சயமாக வந்து விடுவார் அவர் வருவதே உன் பசலை நீக்கும் மருந்து என்று தோழி தலைவிக்கு ஆறுதல் கூறுவதாக இப்பாடல் உள்ளது.

தலைவன் பிரிவால் தலைவியின் உடல் நிறம் மாறுகிறது. மனம் அலை மோதுகிறது. இதை செய்வது யார்? வெறும் உடல் கவர்ச்சியா? இல்லை. ஒரு தெய்வீக சக்தி இப்படி யெல்லாம் உடலையும், மனத்தையும் மாற்றுகிறது. மனிதர்களாக பிறந்தவர்கள் அனைவருக்கும் இந்த பிரிவுத் துயர் இருக்கிறது. இதை இலக்கியத்தில் படிப்பதால் நமக்கு என்ன நன்மை? இவையெல்லாம் இயற்கை யானவை.

தெய்வீக சக்தியால் விளைபவை. நம்மை கரை சேர்க்க தெய்வீக சக்தி விளையாடிக் கொண்டேயிருக்கிறது என்பதை மனதில் பதிய வைத்துக் கொண்டு இவ்விலக்கணத்தை வாசிக்க வேண்டும்.

மற்றுமொரு விஷயத்தையும் உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறோம். இவ்விலக்கியத்தை ஆக்கிய மதுரக் கண்ணங் கூத்தனார் தமது பாடல்களில் பசலை படர்ந்தது. தலைவர் சொன்ன காலம் வந்து விட்டது. ஆனால், அவர் வரவில்லை. அதனால் தலைவி துன்பம் அடைந்திருக்கிறாள். அவள் வளை கழன்றது. என்கிற விஷயங்களையே எல்லா பாடங்களிலும் கூறுவதாக இருந்தால் நாமும் இவைகளுக்கு பின்னால் தெய் வீகம் ஒறு வினையாடுவதை திரும்ப, திரும்ப சொல்லியே ஆக வேண்டும். புதிய விஷயத்தை ஆசிரியர் கூறினால் நாமும் புதிதாக விளக்கம அளிக்க முடியும். கூறிய செய்திகளையே திரும்ப, திரும்பக் கூறினால் நாமும் அதேமுறையில் தான் விளக்கவுரையை அளிப்போம் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறோம். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

ஆடும்-கூத்து ஆடும். மகளிரின்-மகளிரைப் போல. மஞ்ஞை-மயில்கள். அணிகொள்-அழகு பெற. காடும்-காடுகளும். கடுக்கை-கொன்றைகள். கவின்பெற-அழகுபெற. பூத்தன-மலர்ந்தன. பாடு வண்டு-பாடுகின்ற வண்டுகள். ஊதும்-(மலர்களை சூழ்ந்து வட்டமிட்டு ஒலிக்கும்). பணைத்தோள்-மூங்கில் போல். பருவம்-இக்கார்கால மானது. வாடும்-வருத்துகின்றன. பசலை-பசலை நோய்க்கு. மருந்து-மருந்தாகும்.

இகழ்ச்சிக்கு அஞ்சி சென்ற தலைவர்

இகழுநர் சொல்அஞ்சிச் சென்றார் வருதல்,
பகழிபோல் உண்கண்ணாய்! பொய்அன்மை, ஈண்டைப்
பவழம் சிதறி யவைபோலக் கோபம்
தவழும் தகைய யுறவு. 5

விளக்கவுரை

கவர்ச்சியுடைய கண்களை யுடையவளே. நம் தலைவர் இகழ்ச்சிக்கு அஞ்சி பொருள் தேடச் சென்றார். (முயற்சியால் பொருள் தேடாத ஆண்மகனை உலகம் இகழ்ச்சியாகப் பேசும் என்பதால்) இவ்விடத்தில் பவழமானது சிதறியது போல தாம்பலப் புச்சிகள் தவழுகின்றன. (கார்காலத்தில் தோன்றும் செந்நிற பூச்சிகள் தாம்பலப் பூச்சிகள் என்று அழைக்கப் பெறும்). ஆகவே, தலைவர் வரும் காலம் இதுவே. ஆகவே, நீ வருந்த வேண்டிய அவசியமில்லை என்று தோழி தலைவிக்கு ஆறுதல் கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

பகழிபோல்-அம்பு போல. உண்கண்ணாய்-கவர்ச்சியுடைய கண்ணாய். ஈண்டை-இவ்விடத்தை. பவழம்-பவழமானது. சிதறியவை போல-சிந்தியவை போல. புறவு-காடுகள். கோபம்-தாம்பலப் பூச்சிகள். தவழும் தகைய-பரந்து கிடக்கும். சொல்-பழிச் சொல்லுக்கு. அஞ்சி-பயந்து.

இடியே இடித்துக் கூறும் வருந்தாதே

தொடிஇட அற்றா தொலைந்ததோள் நோக்கி,
வடுவிடைப் போழ்ந்(து)அகன்ற கண்ணாய்! வருந்தல்!
கடி(து)இடி வானம் உரறும், நெடுஇடைச்
சென்றாரை நீடல்மின் என்று. 6

விளக்கவுரை

மாவடு நடுவே பிளந்தால் போன்ற பரந்த கண்களை உடையவளே. இப்போது கடுமையாக இடி இடிக்கிறது. இந்த இடியே காலம் தாழ்த்தாது செல்க என்று நம் தலைவருக்கும் இடித்துரைக்கும். ஆகவே, தலைவர் சீக்கிரம் வந்து விடுவார். நீ வருந்தாதே என்று தோழி தலைவிக்கு ஆறுதல் கூறுவதததாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

இடியே இடித்துரைக்கும் என்று கவி கூறியிருப்பது கற்பனை சிறப்புடையது.

அ.பொ.

வடு இடை-மாவடுவின் இடையே. போழ்ந்து-பிளந்தாற் போல. அகன்ற-பரந்த. கண்ணாய்-கண்களை யுடையாய். கடிது இடி-கடுமையாக இடிக்கும். வானம்-மேகம். நெடுஇடை-நெடிய வழியிடத்தும். சென்றாரை-சென்ற நம் தலைவரை. நீடல் மீள்என்ற-காலம் தாழ்த்தாதீர் என்று. தொலைந்த-மெலிந்த. தோள்நோக்கி-தோள்களைப் பார்த்து. வருந்துதல்-வருந்தாதே.

மின்னலும், மழையும் தலைவரை இங்கு கொண்டு வரும்

நச்சியார்க்(கு) ஈதலும், நண்ணார்த் தெறுதலும்,
தற்செய்வான் சென்றார்த் தரூஉம்; தளரியலாய்!
பொச்சாப்(பு) இலாத புகழ்வேள்வித் தீப்போல
எச்சாரும் மின்னும், மழை. 7

விளக்கவுரை

பொருள் தேடி சென்ற நம் தலைவரை வேள்வித் தீ எழுப்பும் புகை போல எப்பக்கமும் மேகம் மின்னி, மழையைச் சொரிந்து நினைவுபடுத்தி அழைத்து வரும் என்று தோழி பருவத்தைக் காட்டி தோழிக்கு ஆறுதலை கூறுவதாக. இப் பாடல் புனையப்பட்டுள்ளது.

தம்மை விரும்பி வந்தவர்க்கு கொடுத்தாலும், பகைவரை அழிப்பவரும் ஆள புகழுடைய நம் தலைர் பொருள் தேடி சென்றார். அவர் மறந்தாலும் இந்த மின்னலும், மழையும் நம் நினைவை அவருக்கு நினைவூட்டி அழைத்து வந்து விடும். வருந்தாதே என்று தோழி தலைவிக்கு ஆறுதல் கூறுகிறாள். இயற்கையே தலைவனை அழைத்து வரும் என்று பாடல்கள் கூறுவது சிறப்பான கற்பனை நயம் பொருந்தியதாக உள்ளது.

அ.பொ.

தளர் இயலாய்-தயிர்ந்த இயல்பினை உடையாய். நச்சியார்க்கு-நம்மை விரும்பியவர்க்கு. நண்ணார்-(விரும்பாத) பகைவரை.

தெறுதலும்-அழித்தலும். தற்செய்வான்-தாய் செய்வான் வேண்டி. சென்றார்-சென்றவரை. பொச்சாப்பு-மறதி. இலாத-இல்லாத. புகழ்-புகழுடைய.

காடுகளே அழைத்து வரும் கலங்காதே!

மண்இயல் ஞாலத்து மன்னும் புகழ்வேண்டிப்
பெண்இயல் நல்லாய்! பிரிந்தார் வரல்கூறும்;
கண்இயல் அஞ்சனம் தோய்ந்தபோல் காயாவும்
நுண் அரும்(பு) ஊழ்த்த புறவு. 8

விளக்கவுரை

புகழ் வேண்டியும், பொருள் வேண்டியும் தலைவன் தலையைப் பிரிந்து சென்றான். ஆனால் குறிப்பிட்ட நேரத்தில் அவன் திரும்பவில்லை. தலைவி வருந்துகிறாள். அதைக் கண்ட தோழி நீ கலங்கவேண்டாம். காயா மலர்ந்த காடுகளே உன் கண்களை நினைவுபடுத்தி தலைவரை இங்கே அழைத்து வந்து விடும் என்று தோழி ஆறுதல் கூறுகிறாள்.

பெண் தன்மை கொண்ட கண்ணுடையவளே. உலகத்தில் நிலைபெறும் புகழை அடையும் பொருட்டு பொருள் தேடி சென்ற நம் தலைவரை கண்ணிற்கேற்ற அஞ்சனம் உறைந்தது போல இருக்கும் காயாஞ் செடிகளும் அதன் அரும்புகளும் உன் கண்களை நினைவுபடுத்தி காடுகளே தலைவரை இங்கு அழைத்து வந்து விடும் என்று தோழி ஆறுதல் கூறுகிறாள். இயற்கை காட்சிகளை காணும் போதெல்லாம் தலையின் நினைவை தலைவனுக்கு நினைவுபடுத்தும் என்று கவி கூறு கிறார். அந்த இயற்கை காட்சிகள் ஜடமல்ல. அந்த இயற்கை காட்சிகளுக்கும் பின்னால் தெய்வீகம் இருக்கிறது. அத் தெய்வமே தலையிடம் இருக்கும் தெய்வீகத்தை நினைக்க வைக்கிறது. எல்லாவற்றையும் தெய்வீகத்துடன் இணைத்துக் கொண்டு தலைவன் தலைவி பிரிவு சம்பந்தப்பட்ட செய்திகளை வாசிக்க வேண்டும். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

ஊழ்தல்-மலர்தல். கண்டயல் அஞ்சனம்-கண்ணின் தன்மையான கருமை. தோய்ந்த-உறைந்த. தயிர் தோய்தல்-தயிர் உறைதல் என்பதை நோக்குக. பெண் இயல்-அச்சம், மடம், நாணம் என்பன. பெண் இயல் நல்லாய்-பெண் தன்மை கொண்ட நல்லாய். புகழ் வேண்டி-புகழை விரும்பி. கண் இயல்-கண்ணுக்கேற்ற. புறவு-காடு.

கருவினை பூக்கள் தலைவரை அழைத்து வரும்

கருவிளை கமண்மலர்போல் பூத்தன; கார்க்(கு)ஏற்(று)
எரிவனப்(பு) உற்றன தோன்றி; - வரிவளை
முன்கை இறப்பத் துறந்தார், வரல்கூறும்
இன்சொல் பலவும் உரைத்து. 9

விளக்கவுரை

தலையின் கைவளை கழலும் என்று தெரிந்திருந்தும் இன்சொல் கூறி பிரிந்து சென்ற தலைவர் வரவில்லை. ஆயினும், அவர் முன்னே இருக்கும் கரு விளைப்பூக்கள் உன்னை நினைவுபடுத்தி இங்கே அழைத்துவரும் வருந்தாதே என்று தோழி தலைவிக்கு ஆறுதல் கூறுகிறாள்.

உன் அழகிய முன்கை வனை கழலுமென்று அறிந்த நம் தலைர் இனிய சொற்களைப் பேசி சென்றார். இப்போது கருவியும் பூக்கள் பூத்துள்ளன. இப்பூக்களே உன்னை அவருக்கு நினைவுபடுத்தி அழைத்து வந்து விடும் என்று தோழி தலைவியிடம் கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது. காடுகள், பூக்கள் மற்றும் உள்ள எல்லா இயற்கை எழில்களிலும் தெய்வீகம் மறைந்திருக்கிறது. அந்த தெய்வீகத்தின் இயக்கமே உலக இயக்கவும். அந்த தெய்வீகமின்றி ஒரு அணுவும் அசையாது என்பதை மனதில் பதிய வைத்துக் கொண்டு இவ்விலக்கியத்தை வாசிக்க வேண்டும். அப்போதுதான் தெய்வத் தமிழில் மலர்ந்துள்ள இந்த இலக்கியத்தின் சிறப்பை மிக சரியாக அறிய முடியும் என்பதை தெரிவித்துக்

கொள்கிறோம். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

தோன்றி-செங்காந்தன் (மணமற்றது). வரிவளை-அழகிய வளைகள். முன்கை-முன் கையிலிருந்து. இறப்ப-கழலுமென்று. இன்சொல்-இனிய சொற்கள். பலவும் உளாத்து-(பிரிவிற்காக) பலவும் மொழிந்து. துறந்தார்-பிரிந்து. பூத்தன-பூக்களையின். கார்க்கு ஏற்று-கார்காலத்திற்கு பொருந்திய. தோன்றி-தோன்றிப் பூக்கள்.

இடி முழக்கத்திற்கு எதிராக எருமை முழக்கம்

வான்ஏறு வானத்(து) உரற, வயமுரண்
ஆன்ஏற்(று) ஒருத்தல் அதனோ(டு) எதிர்செறுப்பக்
கான்யாற்(று) ஒலியில் கடுமான்தேர் என்தோழி
மேனி தளிர்ப்ப வரும். 10

விளக்கவுரை

தோழியானவன் இடி முழக்கத்தையும், எருமை முழக்கத்தையும் கட்டிக் காட்டி தலைவிக்கு ஆறுதல் கூறுகிறாள். இடி முழங்குகிறது. அதற்கு பின்னால் எருமையும் இடிபோன்ற சப்தத்தில் கத்துகிறது. இதனை செவியுறும் தலைவர் நிச்சயம் வந்து விடுவார் வருந்தாதே என்று தோழி கூறுகிறாள்.

இடிமுழக்கமும், எருமை முழக்கும் ஒன்று போல் இருப்பதை கப்னை செய்து தலைவன் அதை கேட்டது போலவும் கார்காலம் வந்து விட்டதை அவனுக்கு நினைவு படுத்துவதைப் போலவும் ஆசிரியர் நயம்பட பாடலை புனைந்திருக்கிறார். தெய்வத் தமிழ் என்பது ஆழ்ந்த கற்பனை களை புலப்படுத்தக் கூடியது. கவிஞர்களை கருவியாக்கி தமிழ்த்தாய் விளையாடுகிறாள். தமிழ்த் தாய் வேறு. தெய்வம் வேறுஅல்ல. அந்த தெய்வீகமே இந்த அற்புத இலக்கியங்களை படைத்து நம்முன்னே நிறுத்துகிறது. நரகமாக்கிட இந்த உலகில் சுவர்க்கத்தை முன்னே நிறுத்துகிறது.

இதைப் புரிந்து கொண்டு இவ்விலக்கியத்தை நீங்கள் படிக்க வேண்டும் என்பதற்காகவே தொடர்ந்து இதனை நினைவுபடுத்துகிறோம். இவ்விலக்கியத்தின் ஆசிரியரும் கூறிய விஷயங்களையே தான் திரும்ப, திரும்ப கூறுகிறார். அதனால் நானும் தெய்வீகம் இருப்பதை திரும்ப, திரும்ப கூறுகிறோம். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப் பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

வய-வளி. ஆன்-எருவை. என்தோழி-என் தோழியே. வான்ஏறு-இடி. வானத்து உரற-மேகத்தினிடம் முழக்க. முரண்-மாறுபாட்டினையுடைய. அதனோடு-அவ்விடியோடு. செருப்ப-எதிராக. கடமான் தேர்-விரைந்த வேகம் கொண்ட குதிரைப் பூட்டப்பட்ட தேர். கான்யாற்று ஒலியின்-காட்டாற்றின் ஒலிபோல். மேனி-உன் மேனி. தளிர்ப்ப-தழைக்க.

காந்தள் மலர்கள் தலைவரை அழைத்து வரும்

புணர்தரு செல்வம் தருபாக்குச் சென்றார்;
வணர்ஒலி ஐம்பாலா! வல்வருதல் கூறும்;
அணர்த்(து)எழு பாம்பின் தலைபோல் புணர்கோடல்
பூங்குலை ஈன்ற புறவு. 11

விளக்கவுரை

திரும்பவும் தோழி தலைவிக்கு ஆறுதல் கூறுகிறாள். பிரிந்து சென்ற தலைவர் நிச்சயம் வந்து விடுவார். அங்கு பூத்திருக்கும் காந்தள் மலர்களே உள்ளன. அவருக்கு நினைவு படுத்தி இங்கே அழைத்து வந்துவிடும் என்று சொல்கிறார்.

ஐவகை செயல் கொண்ட கூந்தலையுடையவளே. கானகத்தில் மேல்நோக்கி எழும் பாம்பின் தலைபோல் இணைந்த காந்தள் மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. பொருள் தேடிச் சென்ற நம் தலைவருக்கு இந்த காந்தள் மலர்களே உன்னை நினைவுபடுத்தி இங்கே அழைத்துவரும், இடி

அழைத்து வரும் மலர் அழைத்து வரும் என்று திரும்ப, திரும்ப கவி இயற்கை காட்சிகளை கட்டிக் காட்டி பாடலைத் தருகிறார். இந்த இயற்கை காட்சிகளை தலைவன் தலைவி யோடு இணைத்திருக்கிறார் ஆசிரியர். விளக்க வுரையில் இந்த இயற்கை காட்சிகளையும் தலைவன், தலைவி ஆகியோரையும் நாம் தெய்வீகத்துடன் இணைத்து இவ்வியக்கத்தையே வேத ஒலியாக ஒலிக்கச் செய்து கொண்டிருக்கிறோம்.

ஒரு மனிதனுக்கு உண்மையான ஒன்றை அளிப்பதுதான் மகத்தானது. இந்த வாழ்க்கையில் எந்த சாரமும் இல்லை இறுதியில் மரணம்தான் அனைவருக்கும் பரிசாக கிடைக்கிறது. படித்தவன், படிக்காதவன், பாமரன், மேதை, செல்வந்தன், பிச்சைக்காரன் என்று அனைவருமே மடிந்தாக வேண்டும். கார் நாற்பது என்ற இலக்கியத்தை வெறுமனே படிப்படியாய் அவர்களுக்கும் அதே நிலைதான். ஆகவே, தெய்வீகத்தை இணைத்து விளக்கவுரை தருகிறோம். இதனை அறிந்து வாசிப்பவர்கள் அச்சத்தை விரட்டியடிப்பார்கள்.

தெய்வத்தின் அருகில் செல்வார்கள் இல்லற சுகத்தை அளவோடு அனுபவித்து அந்த காம சக்தியை வேறு பல ஆக்கபூர்வமான செயல்களுக்கு பயன்படுத்துவார்கள். இந்த விளக்கவுரையை எழுத வைத்திருப்பது அந்த தெய்வீகத்தின் சக்தியே என்பதை நாங்கள் அறிந்திருக்கிறோம். நீங்களும் இதை சரியாகப் புரிந்து கொண்டு இவ்விலக்கியத்தைப் படிக்க வேண்டும். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

வணர்-நெளிவுடைய. ஒலி-தழைக்க. ஐம்பாலாய்-ஐவகை செயல் கொண்ட கூந்தலையுடையாய். புறவு-காட்டகத்து. அணர்த்து எழு-மேநோக்கி எழும். பாம்பின் தலைபோல்-பாம்பின் படத்தைப் போல. புணர் கோடல்-இணைந்த காந்தள்கள். பூங்குலை ஈன்ற-பூக்கொத்துக்களை நல்க. புணர்தரு-பொருந்து தலையுடைய. செல்வம்-பொருளை. தருபாக்கு-கொண்டுவர.

தலைவர் தவறாது வந்து விடுவார்

மையொழில் உண்கண் மயில்அன்ன சாயலாய்!
ஐயம்தீர் காட்சி அவர்வருதல் திண்ணதாம்;
நெய்யணி குஞ்சரம் போல இரும்கொண்மூ
வைகலும் ஏரும் வலம். 12

விளக்கவுரை

மேகங்களை சுட்டிக்காட்டி தோழி தலைவிக்கு ஆறுதல் கூறுகிறாள். நாடோறும் மேகங்கள் தோன்றத் தொடங்கி விட்டன. இதை தலைர் நன்கு அறிவார். கட்டாயம் வந்து விடுவார். நீ கலங்கவேண்டாம் என்று அவர் கூறுகிறார்.

கருமையும், எழிலும் பொருந்திய கவர்ச்சியுடைய கண் களை யுடையவளே. எண்ணம் பூசப்பட்ட யானைகள் போல் கார் மேகங்கள் நாடோறும் தோன்றத் தொடங்கி விட்டன. இது கார்காலத்திற்கான அடையாளம். இதை நம் தலைவர் நன்கு அறிவார். மயக்கம் தீர்ந்த அறிவினை உடைய அவர் கட்டாயம் வந்து விடுவார். நீ வருந்த வேண்டிய அவசியமில்லை என்கிறாள். ஆசிரியர் திரும்ப, திரும்ப கூறிய விஷயத்தையே கூறுகிறார். ஆனால், வர்ணளைகள் மட்டும் மாறுகின்றன. இந்த வர்ணனைகள் நம் மனத்திற்கு ஒய்வு தருகின்றன. தலைவன் தலைவி மீதுள்ள கொண்ட வேகம், தலைவி தலைவனை காணத் துடிக்கும் ஏக்கம் ஆகிய எல்லாவற்றிற்குப் பின்னால் தெய்வீக சக்தி இயக்குகிறது என்பதை இணைத்துக் கொள் ளுங்கள். எல்லாமே காரண காரியத்தோடு தான் இவ்வுலகில் நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. நாம் பேசும் பேச்சுகள், படைக்கப்படும் இலக்கியங்கள், மற்றுமுள்ள எல்லா செயல் களும் தெய்வீகத்துடன் இணைந்தபடி செல்ல வேண்டும். அதுவே சிறப்பு. அதுவே நமக்கு நிலையான மகிழ்ச்சி. இச் சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள் ளது.

அ.பொ.

காட்சி-அறிவு. தாம்-அசை. ஏர்-எழுச்சி. இருமை-கருமை. மை எழில்-கருமையும் அழகும் பொருந்திய. உண் கண்- கவர்ச்சியுடைய கண். மயிலன்ன சாயலாய்-மயில் போன்ற சாயலை உடையவள்.

வைகலும்-நாடோறும். வலம் ஏழும்-வலமாக எழும். ஐயம் தீர்காட்சி-மயக்கம் தீர்ந்த அறிவினையுடைய. அவர்-நம் தலைவர். வருதல்-மீளவருதல். திண்ணியது-உண்மை.

மின்னும் மின்னுகிறது...!
தலைவரும் வந்திடுவார்!

ஏந்(து)எழில் அல்குலாய்! ஏமார்ந்த காதலர்
கூந்தல் வனப்பின் பெயல்தாழ; - வேந்தர்
களி(று)எறி வாளரவம் போலக்கண் வெளவி
ஒளிறுபு மின்னும் மழை. 13

விளக்கவுரை

இப்பாடலும் தலைவிக்கு தோழி ஆறுதல் கூறுவதாகவே உள்ளது. மேகம் மின்னுகிறது. மழை மேகத்தால் மழை பொழிகிறது. இது கார்காலம் என்பதை தலைவருக்க இவை நினைவுபடுத்தும்.

ஆகவே, தலைவர் வருவார். நீ வருந்த வேண்டாம் என்று அவன் ஆறுதல் கூறுகிறாள். அழகுடைய நிமிர்ந்த அல்குலை உடையவளே. கூந்தலின் வனப்பின் அழகு போல மழை பொழிய, அரசர் யானையை வெட்டி வீழ்த்துகின்ற வானின் ஒன்னைப் போல மின்னல் மின்னுகிறது. ஆகவே, தலைவர் வந்து விடுவார் என்று தலைவியை தோழி தேற்றுகிறாள். அரசர்கள் யானைகளை வெட்டி வீழ்த்த தக, தகக்கும் ஒளி பொருந்திய வாளைப் பயன்படுத்துவார்கள். அந்த வாளின் ஒளி போல் வானம் மின்னுகிறதாம். எனே அரிய கற்பனை! இந்த கற்பனையிலும் தெய்வீகம் மின்னுகிறதே. இயற்கையை ஆட்டுவிப்பதும் அந்த தெய்வீக சக்தி தானே. இயற்கைக்கு கட்டுப்பட்டு போவது மனித வாழ்க்கை அல்ல. இயற்கையை தம் கட்டுக்குள் கொண்டு வருவதல்லவோ சிறப்பு? இந்த இயற்கை காட்சிகளை வெறும் ஜடமாக பார்க்க வேண்டாம். நமக்குள் இருக்கும் தெய்வீகம். உலகம் முழுவதும் நிறைந் திருக்கும். தெய்வீகம் தான் இந்த மின்னலையும், மேகங்களை யும், அழகிய பெண்களையும், ஆண்களையும் படைக்கிறது.

இதை அறியாமல் இவ்விலக்கியத்தைப் படிப்பதால் பயன் உண்டோ? சிந்தித்து முடிவு எடுங்கள். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

ஏம்-ஏமம், கடைக்குறை. காதலர்-மகளிர். வாளரவம்-உம்மைத் தொகை. வாள்-மின்னலுக்கும். அரவம்-இடிக்கும் உவமையாக வந்தன.

முல்லை அரும்பி விட்டது
தலைவர் வந்து விடுவார்

செல்வம் தரல்வேண்டிச் சென்றநம் காதலர்,
வல்லே வருதல் தெளிந்தாம்; - வயங்(கு) இழாய்!
முல்லை இலங்(கு)எயி(று) ஈன; நறும்தண்கார்
மெல்ல இனிய நகும். 14

விளக்கவுரை

முல்லை அரும்பத் தொடங்கி விட்டது. வானத்தில் மின்னல் தோன்றி விட்டது. ஆகையால், தலைவர் விரைவில் வருவார். நீ வருந்த வேண்டாம். என்று மீண்டு தோழி தலைவியை தேற்றுகிறாள்.

விளங்குகின்ற அணிகலன்களை அணிந்தவளே. முல்லை கொடிகள் பெண்களின் பற்களைப் போல் அரும்புகின்றன. குளிந்த மேகத்துடன் வானத்தில் மின்னல் தோன்றுகிறது. தலைவர் விரைவில் வந்து விடுவார். ஆகவே, நீ வருத்தப்பட வேண்டியதில்லை என்று தோழி தலைவிக்கு ஆறுதல் கூறினாள். ஒவ்வொரு பாடலிலும் வர்ணனை தான் மாறி இருக்கிறது. விஷயம் ஒன்றுதான். ஆகவே, விளக்கவுரையில் நாமும் அதையே சொல்ல வேண்டியிருக்கிறது. நம்முடைய வாழ்க்கை என்பது செயற்கையானது. இதுமுடிந்துவிடும் நம் உண்மை யான தன்மை என்பதுதான் நிலையானது. நம்முடைய செயல்கள் அனைத்தும் முற்பிறவிகளின் செயல்களின்படி செயல்படுகிறது. ஆகவே, நம்முடைய தற்போதைய செயல்கள் அர்த்தமுடன் இருக்க வேண்டுமானால், இந்த வாழ்க்கையை

தெய்வீகத்தை முன்னிறுத்தி பயணம் செய்ய வேண்டும். நமக்கு மட்டுமல்ல. இந்த உலகம் முழுவதுக்கும் இதுவே விதி தெய்வீகத்தை முன்னே வைக்காமல் வெறும் லௌகிகத்தை முன்வைத்து பயணம் செய்தால் அழிவுதான் அதன் விளைவும். ஆகவே, இந்த கார் நாற்பது இலக்கியத்திற்கு பின்னால் தெய்வீக சக்தி நிறைந்திருப்பதை நினைவுபடுத்தி வாசித்துச் செல்லுங்கள் என்று விளக்கவுரையாககூற கடமைப்பட்டிருக் கிறோம்.

அ.பொ.

வயங்கு இழாய்-விளையாடுகின்ற அணிகளை அணிந்தவளே. முல்லை-முல்லைக் கொடிகள். இலங்கு-விளங்குகின்ற. எயிறு ஈன-(மகளின் பற்களைப் போன்ற). அருப்புகளை கொடுக்க. நறும் தண்கார்-நல்ல குளிர்ந்த மேகம். மெல்ல இனிய நகும்-மெல்ல இனியவாக மின்னும். செல்வம்-பொருளை. தரல்வேண்டி-தேடி அடைதலை விரும்பி. தெளிந்தோம்-அறிந்தோம்.

தும்பி இசை இசைக்க வண்டு பாட்டுப் பாடுகிறது

திருந்(து)இழாய்! காதலர் தீர்குவர் அல்லர்;
தூருந்தின் குவிஇணர் உள்உறை ஆகத்
திருந்(து)இன் இளிவண்டு பாட, இரும்தும்பி
இன்குழல் ஊதும் பொழுது. 15

விளக்கவுரை

குருந்த மலரின் உள்ளே இருந்து வண்டு பாடுகிறது. வெளியே தும்பி இசை இசைக்கிறது. இந்த பருவத்தில் தலைவர் நம்மை பிரிந்திருக்க விரும்பமாட்டார். விரைவில் வருவார். நீ வருந்தாதே என்று பருவம் காட்டி இப்பாடலிலும் தோழி தலைவிக்கு ஆறுதல் கூறுகிறாள். செப்பம் செய்யப் பட்ட அணிகலன்களை அணிந்தவளே. குருந்த மலர்களுக் குள்ளே இடத்தையே தங்குமிடமாகக் கொண்டு வண்டுகள் பாடுகின்றன. வெளியே இருக்கும் கரிய தும்பிகள். இனிய குழல் போல இசை இசைக்கின்றன. ஆகவே, தலைவர்

விரைவில் வருவார். கலங்காதே என்று தோழி தலையை தேற்றுகிறாள். திரும்ப, திரும்ப தலைவர் வருவார் கலங்காதே, வருந்தாதே என்று ஆசிரியர் கூறுகிறார். கரிய தும்பி இசை இசைப்பதும், வண்டுகள் பாடுவதும், அதைப் பார்த்து தலைவர். தலைவியின் ஞாபகம் வந்து திரும்ப நினைப்பதும் தற்செயலாக நடக்கக் கூடிய செயல்களே. இந்த கற்பனை களை மனத்தில் வளர்த்து இவ்விலக்கியத்தை படைத்த கவியும் அவராகவர் இதை செய்தார்? இல்லை. தெய்வீக சக்தி யின் தூண்டுதலால் தான் இவை அனைத்தும் நிகழ்கின்றன. இந்த ஞான நினைவுடன் இவ்விலக்கியத்தைப் படிப்போர் தவம் செய்தவர்க்கு ஈடாக மாறுவர் என்பது உறுதி கவி கூறிய விஷயத்தை திரும்ப, திரும்பக் கூறுவதால் நமக்கும் தெய்வீக சக்தியை திரும்ப, திரும்ப கூறுவதற்கு நல்வாய்ப்பாக அமைந் திருக்கிறது. எல்லாம் இறைவன் மயம் என்றுவாயால் கூறினால் மட்டும் போதாது. அதை வாழ்வில் செயல் படுத்திப் பார்ப் பதில்தான் நமக்கு வெற்றி இருக்கிறது. இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

திருந்து இழாய்-செப்பம் செய்யப்பட. குவிஇணர் உள்-குளிர்ந்த பூங்கொத்துக்களிடம் உள்ளிடம். உறைஆக-தங்குமிடமாக இருந்து கொண்டு. திருந்து இன்இளி-செப்பம் செய்யப்பட்ட இனிய பண்ணை. வண்டுபாட-வண்டுகள் பாட. இரும் தும்பி-(புறத்தேயுள்ளே) கரிய தும்பிகள். இன்குழல் ஊதும்-இனிய குழல் போல் இசைக்கும்.

குயில் கூவவில்லை

கருங்குயில் அறை, மாமயில் ஆலப்,
பெருங்கலி வான்ம உரறும்; பெருந்தோள்!
செயலை இளந்தளிர் அன்னநின் மேனிப்
பசலை பழங்கண் கொள. 16

விளக்கவுரை

குயில் கூவுவதை விட்டு விட்டது. மயில் ஆடுகிறது. வானம் இடிக்கிறது. பசலை மறைய முற்படுகிறது. இது தலைவர்

வருவதற்கான அடையாளங்கள். ஆகவே, நீ வருந்தாதே என்று தோழி. தலைவிக்கு ஆறுதல் கூறுவதாக இப் பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

பெருந்தோள்-பெரும் தோள்களை உடையவளே. செயலை-அசோகின்றது. அன்ன-போன்ற. நின்மேனி-உன் உடலினுள்ள. பசலை-பசலையானது.

பறையொலி போன்ற இடி முழக்கம்

அறைக்கல் இறுவரைமேல் பாம்பு சவட்டிப்
பறைக்குரல் ஏறொடு பெளவம் பருகி,
உறைத்(து)இருள் கூர்ந்(து) அன்று வானம் பிறைத்தகை
கொண்டன்று பேதை நுதல். 17

விளக்கவுரை

பேதைத் தன்மையுடையவளே. மேகம் பறையொலி போன்று இடி முழக்கம் செய்கிறது. கடல் நீரைப் பருகிய வானத்தின் இந்த இடி முழக்கம் நம் தலைவரின் கவனத்தை திசை திருப்பும். பாம்புகளை வருந்தச் செய்யும் பாறைகள். அந்த பாறைகளின்மேல் மழை பொழிந்து. அவ்விடத்தை இருள் மயமாக்குகிறது. ஆகவே, தலைவர் வருவது உறுதி. உன் வெற்றி பிறைமதியின் அழகுபோல் தெரிகிறது என்று தலைவிக்கு தோழி ஆறுதல் கூறுவதாக இப்பாடல் புனையப் பட்டுள்ளது.

அ.பொ.

பேதை-பேதைத் தன்மையுடையவன். வானம்-மேகமானத. பெளவம் பருகி-கடல் நீரைக் குடித்து. பறைகுரல்-பாறை ஒலி. பாம்பு-பாம்புகளை. சவட்டி-வருத்தி.

பொலிவிழந்த காடுகள்

கல்பயில் கானம் கடந்தார் வர, ஆங்கே
நல்லிசை ஏறொடு வானம் நடுநிற்பச்
செல்வர் மனம்போல் கவின்ஈன்ற, நல்கூர்ந்தார்
மேனிபோல் புல்லென்ற காடு. 18

விளக்கவுரை

காடுகள் பொலிவை இழந்து விட்டன. பூக்கள் மட்டும் மலர்ந்திருக்கின்றன. இடியோடு மழை பொழிகிறது. இது கார்காலத்தில் அறிகுறி என்று தலைவருக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, நீ வருந்தாதே என்று தோழி தலைவிக்கு ஆறுதல் கூறுகிறாள்.

அ.பொ.

கல்பயில்-கற்கள் நிறைந்த காடு. கடந்தார்-கடந்து சென்ற தலைவர்.

பாகனே... நாம் புறப்படுவோம்

நாஞ்சில் வலவன் நிறம்போல பூஞ்சினைச்
செங்கால் மராஅம் தகைந்தன; - பைங்கோல்
தொடிபொலி முன்கையாள் தோள்துணையா வேண்டி
நெடுஇடைச் சென்ற(து); என் நெஞ்சு. 19

விளக்கவுரை

தலைவன் பாகனிடம் கூறுவதாக இப்பாடல் உள்ளது. தலைவி பிரிவுத் துயரில் வருந்துகிறாய் என்பதை என்மனம் கூறுகிறது. ஆகவே, பாகனே... நாம் விரைந்து செல்வோம் என்கிறான். தலைவன் கலம்பையை ஆயுதமாக உடைய பலராமனின் நிறம் போல வெண்மை நிறம் போல் வெண் கடம்புகள் பூத்தன. என் மனம் தலைவியை நாடிச் செல்கிறது. பாகனே நாம் விரைந்து செல்வோம் என்று தலைவன் கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

நாஞ்சில்-கலப்பையை உடையது. வலவன்-வெற்றியுடையோனாகிய பலராமன். பூசினை-பூங்கொம்பு. செங்கால்-சிவந்த தாளினையுடைய. மராஅம்-வெண் கடம்புகள்.

வேந்தன் இட்ட வேலை முடிந்தது

வீறுசால் வேந்தன் வினையும் முடிந்தன;
ஆறும் பதமினிய ஆயின; - ஏறொ(டு)
அருமணி நாகம் அனுங்கச்செருமன்னர்
சேனைபோல் செல்லும், மழை. 20

விளக்கவுரை

இப்பாடலும் தலைவன் பாகனிடம் சொல்வதாக இப்பாடல் உள்ளது. அரசன் கூறிய வேலைகள் முடிந்தன. வழிகளும் இனிதாக ஆகியது அணி, அணியாய் வானத்தில் மேகங்கள் வானத்தில் செல்ல தொடங்கி விட்டன. ஆகையால் நாம் செல்வோம் என்று தலைவன் கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

வீறுசால்-வெற்றி மிகுந்த. வேந்தன்-அரசனுடைய. விளையும்-போர்த் தொழில்களும். முடிந்தன-முடிவடைந்தன. ஆறும்-வழிகளும் இனிது ஆயின.

முல்லை மலர்ந்தது, தலைவி நினைவு வந்தது

பொறிமாண் புனைதிண்தேர் போந்த வழியே,
சிறுமுல்லைப் போதெல்லாம் செவ்வி, - நறுநுதல்
செல்வ மழைத்தடங்கண் சின்மொழிப் பேதைவாய்
முள்எயி(று) ஏய்ப்ப வடிந்து. 21

விளக்கவுரை

வலிமையுடைய தேர் சென்ற வழியினிலே சிறிய அரும்பு களையுடைய முல்லைப் பூக்கள் பூத்து மலர்ந்திருக்கின்றன. இந்த முல்லை அரும்புகள் தலைவியின் கூர்மையான பற்களை நினைவுபடுத்துகிறது. இதனை அறிந்த தலைவன் நாம் விரைந்து செல்வோம் என்று பாகனிடம் கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது. முல்லை பூத்தது. வானம் இடிக்கிறது. முல்லை பூத்தது. வானம் இடிக்கிறது. மின்னல் இடிக்கிறது என்று சொன்னதையே திரும்ப, திரும்ப இப்பாடல் கூறுகிறது.

முல்லை அரும்புகள் தலைவியின் கூறிய பற்களை தலைவனுக்கு நினைவுபடுத்துகின்றன. பாகனே... விரைவில் செய்க என்று தலைவன் கூறுகிறாள். முல்லை அரும்புகளின் கவர்ச்சி என்பது இயற்கை கவர்ச்சி தலைவியின் பற்கள் பெண்ணின் கவர்ச்சி. இந்த கவர்ச்சி வெறும் முல்லை

பூக்களின் ஒரு பெண் அழகின் கவர்ச்சியா தலைவனை ஈர்க்கிறது. ஒருபோதும் இல்லை. முல்லைப் பூக்களின் அழகுக்கு பின்னால் ஒரு தெய்வீக சக்தி இயக்குகிறது. அதேபோல் எழில் மிகுந்த தலைவியின் உடல் அழகு, பற்களின் கவர்ச்சி ஆகியவற்றிற்கும் பின்னால் ஒரு தெய்வீகம் விளையாடுகிறது. இந்தப் பேருண்மையைப் புரிந்துகொள் ளாமல் தலைவி வருந்தினாள். தோழி ஆறுதல் கூறினாள். கார்காலம் வந்து விட்டது போன்ற செய்திகளை திரும்ப, திரும்ப படிப்பதால் என்ன நன்மை என்பதையும் சிந்திக்க வேண்டும். எல்லாவற்றையும் தெய்வீக மாக்குங்கள். இந்த உலகில் நாடி வாழ்கின்ற ஒவ்வொரு விநாடியும் முக்கிய மானவை.

கார் நாற்பது, என்ற இவ்விலக்கியம் மலர்ந்திருப்பது நம் மன ரணங்களை ஆற்றுவதற்காக பயன்படவேண்டும். ஏதோ படித்தோம். முடித்தோம் என்றிருக்கக் கூடாது. இயற்கை வர்ணனைகள் அனைத்திலும் தெய்வீகப் பின்னனியில் உள்ளது. தலைவன், தலைவி ஆகியோர் இளமைக்கு பின்னாலும் அதே தெய்வீகம் மிளிர்கிறது. வெறும் சாதப் பிண்டத்தைக் கண்டு ஏற்படும் கவர்ச்சியல்ல அது. தெய்வீக ஒளி இருவரிடமும் மிளிர்கிறது. உலகில் உள்ள எல்லா உயிர்களிடமும் அந்த தெய்வீக ஒளி இருந்து உலக இயக்கத்தை நடத்துகிறது. இதனை உறுதியாக மனதில் பதிய வைத்துக் கொண்டு தெய்வத் தமிழில் உருவாகியிருக்கும் இந்த இலக்கியத்தை வாசியுங்கள். இந்த வாசிப்பு உங்களுக்கு ஒரு தவம் போல விளங்க வேண்டும் என்பதற்காகவே விளக்கவுரையில் இந்த உண்மைத் தத்துவத்தை தொடர்ந்து கூறிவருகிறோம். இச் சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள் ளது.

அ.பொ.

பொறி-எந்திரங்கள். மாண்-சிறந்து. புனை-அலங்கரிக்கப்பட்ட. திண்தேர்-வலிமையுடையதோர். போந்த வழியே- சென்ற வழியினிலே. செவ்வி-அழகு மிகுந்த. நறுநுதல்-நல்ல நெற்றியையும். செல்வ-வளப்பமான. தடங்கண்-அகன்ற கண்கள்.

செல்வம் போல் பூக்கள் பூத்தன

இளையரும் ஈர்ங்கட்(டு) அயர, உளைஅணிந்து
புல்உண் கலிமாவும் பூட்டிய; - நல்லார்
இளநலம் போலக் கவினி வளமுடையார்
ஆக்கம்போல் பூத்தன காடு. 22

விளக்கவுரை

இப்பாடலும் தலைவன் பாகனிடம் சொல்வதாக உள்ளது. சேவகர்கள் குளிர்கால உடையை உடுத்தி விட்டனர். குதிரைகள் தேரில் பூட்டியதும் பெண்களின் இளமை அழகு போல், வருவாய் உடையோர் செல்வம் போல் காடுகள் பூத்துக் குலுங்குகின்றன. பாகனே... தேரினைப் பூட்டு நாம் செல்வோம் என்று கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள் ளது. வருவாய் உடைய செல்வந்தரின் செல்வம் போல் காடுகள் முழுவதும் மலர்கள் பூத்துக் குலுங்குகிறோம். கவியின் கற்பனை நயம் அருமையானது. காட்சிகள் அழகாக இருந்தால் மனம் மகிழ்ச்சியால் துள்ளுகிறது அல்லவா? மனம் மகிழ்ச்சியுடன் இருக்கும் போதெல்லம் அளவில்லாத வலிமை அதற்கு உண்டாகிறது. அதனால்தான் மனத்தை தளரவிடக் கூடாது என்று சொல்கிறார்கள்.

மனம் தளர்ந்தால் எல்லா நோய்களும் அதைப் பற்றும். ஆகவே, இந்த இயற்கைக் காட்சிகள் மனதிற்கு புத்துணர்வை ஏற்படுத்துகின்றன. காடுகள் முழுவதும் மலர் பூத்துக் குலுங் குவது தலைவனுக்கு தலைவியின் உருவத்தை நினைவு படுத்துகிறது. நாம் இந்த இயற்கை காட்சிகளை கற்பனை நோக்குடன் காணும்போது மனம் அளவுகடந்த அமைதியை நோக்கிச் செல்கிறது. மனம் அமைதி அடைந்தால் உடல் வலிவு பெறும். மனம் வலிமை பெறும். உடல் வலிமை பெறுவ தற்கு உணவு தேவை. நல்ல சத்துள்ள உணவு தேவை. அதே போல்மனம் வலுவடைய இதைப் போன்ற இயற்கை காட்சி களை காணும் வாய்ப்பு தேவை. அந்த நல்வாய்ப்பினை கார் நாற்பது ஆசிரியர் நமக்கு அளித்திருக்கிறார் அதை கவனமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதன் பொருட்டே தலைவன், தலைவி ஆகியோருக்குப் பின்னால் ஒரு தெய்வீகம்

விளையாடுகிறது என்பதை நாம் திரும்ப, திரும்ப விளக்க வுரையில் கூறிவருகிறோம்.

அ.பொ.

இளையரும்-சேவகரும். ஈர்ங்கெட்டு-குளிர் காலத்திற்குடைய உடைகளை. அயர-உடுக்க. புல்உண்-புல்லை உண்கின்ற. நல்லார்-நற்குண மகளிர். இளநலம்போல-இளமை அழகுபோல. கவினி-அழகுற்று. வளம் உடையார்-வருவாயை உடையாரது. பூத்தன-மலர்ந்தன.

ஆலங்கட்டி சிந்துகிறது
அருமை தலைவர் வந்து விடுவார்

கண்திறள் முத்தம் கடுப்பப், புறவெல்லாம்
தண்தளி ஆலி புரளப், புயல்கான்று
கொண்(டு)எழில் வானமும் கொண்டன்(று) எவன் கொலோ?
ஒண்தொடி ஊடு நிலை. 23

விளக்கவுரை

ஒளி பொருந்திய வளையல் அணிந்தவளே. காடுகள் முழுவதும் முத்துப் போல நீர்துளிகள் படிந்திருக்கின்றன. ஆலங்கட்டிகள் சிந்துகின்றன. ஆகவே, நீ ஊருதல் வேண்டாம் தலைவர் நிச்சயமாக வந்துவிடுவார் என்று தோழி தலைவிக்கு ஆறுதல் கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

ஆசிரியர் கூறிய செய்திகளையே திரும்ப, திரும்ப கூறுகிறார். வர்ணனைகள்கூட திரும்ப, திரும்ப ஒன்று போலவே வருகின்றன. ஆனாலும், தெய்வீகம் என்பது எல்லாவற்றிற்கும் பின்னால் இயக்குகிறது என்பதை எத்தனை முறை கூறினாலும் அது சரியானதே. ஏனெனில் இந்த உலக இயக்கத்தை ஒரு ஜடம்போல் தான் எல்லோரும் பார்க்கி றார்கள். அதனால்தான் துன்பங்களும், சஞ்சலங்களும், அச்சங்களும் அவர்களை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக் கிறது. எல்லா செயல்களையும் தெய்வீகத்துடன் இளைக்கும் பழக்கம் உலக மக்களுக்கு இன்னும் வரவில்லை இதற்கு என்ன காரணம்?

முற்பிறவிகளின் பலன்தான். ஆகவே, இப்பிறவியிலாவது நம் பாதையை சரி செய்து கொள்வோம். தெய்வ தமிழால் இயற்றப்பட்ட இவ்விலக்கியத்தை தெய்வீகத்துடன் இணைத்துப் பொருள் கொள்வோம். அதன் காரணமாக கோடானு கோடி வாசர்கள் தவம் செய்ததற்கு நிகராவார்கள். செய்யும் செயல் முழுவதையும் தெய்வீகமாக்கினால் எல்லாமே தவமாக மாறிவிடும். தவ வலிமையைப் பற்றி அதிகம் விளக்க வேண்டியதில்லை. தவவலிமை எல்லாவற்றையும் வெற்றியாக்கும். பகைவரை புறமுதுகிட்டுஓடாது செய்யும். மெய்ஞான கதவுகளை திறக்கச் செய்யவும். ஆகவே, கார் நாற்பது தமிழ் இலக்கியத்தில் ஆசிரியரால் கூறப்பட்டிருக்கும் இயற்கை வர்ணனைகளுக்குப் பின்னால் தெய்வீகம் இருப்பதை புரிந்து கொண்டு வாசியுங்கள். அதேபோல் ஆண், பெண் ஆகியோர்கள் காதல் வேகத்திலும் தெய்வீக சக்தி ஒன்று இணைந்து இயக்குவதைப் புரிந்துகொண்டு வாசியுங்கள். இதனால் பெரும் பயன் விளைவது உறுதி.

அ.பொ.

ஒண்தொடி-ஒளி பொருந்திய வளையல் அணிந்தவளே. புறவு எல்லாம்-காடுகள் யாவும். கண்திறன்-வடிவு திறண்ட. முத்தம் கடுப்ப-முகத்தை ஒப்ப. தண் ஒளி-குறிர்ந்த நீர்த்துளி. ஆலி-ஆலங்கட்டிகளும். புரள-சிதறிக்கிடக்கும்படி. புயல்-மேகம். கான்று-பொழிந்து. ஊடுநிலை-பிணங்குத் தன்மை. எவன்கொல்-எதற்கு? வேண்டாம்.

யானையின் மதநீர் மணம் வருகிறது

எல்லா வினையும் கிடப்ப, எழுநெஞ்சே!
கல்லோங்கு கானம் களிற்றின் மதநாறும்;
பல்இரும் கூந்தல் பணிநோனாள் கார்வானம்
மெல்லவும் தோன்றும், பெயல். 24

விளக்கவுரை

மலை உயர்ந்த காடுகளில் யானையின் மதநீர் மணம் வீசுகிறது. கரிய மேகத்தால் மழைத் தூறலும் விழுந்து கொண்டிருக்கிறது. அடர்ந்த கரிய கூந்தலையுடைய தலைவி இனியும் நம் பிரிவை பொறுக்கமாட்டாள். மனமே எல்லாத் தொழில்

களும் முடிந்தன. இனித் தலைவியைக் காண வேண்டும். எழுவாயாக என்று தலைவன் மனத்திடம் சொல்வதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

மனம் என்பது தானாக இயங்குவதில்லை. அவரவர் கர்ம வினைகளுக்குத் தகுந்தாற்போல் மனத்தின் போக்கு மாறுகிறது. அதனால்தான் மனத்தை தூய்மையாக்க வேண்டும் என்று சான்றோர்கள் சொல்லியிருக்கிறார்கள். தலைவி மீது அன்பு கொண்டவன் தலைவன். நேர்மையானவன் வீரன். சொன்னசொல்லை காப்பாற்றவேண்டும் என்று நினைப்பவன். இந்த குணநலன்களுக்கு ஏற்ப அவன் மனச்சாட்சி அவனுக்கு அறிவுரை வழங்குகிறது. மதநீர் வாடை வருகிறது. தூறல் போட்டபடி இருக்கிறது. கார்காலம் வந்து விட்டது. தலைவி இந்த காலத்தை எதிர்பார்த்து காத்திருப்பாள். ஆகவே, அவள் வருந்தாதபடி நாம் உடனே செல்லவேண்டும் என்று மனச்சான்று கூறுகிறது. மனதை இயக்கும் தெய்வீக சக்தி மனதின் நேர்மையான நிலைகளின் அறைக்குத் தகுந்தபடி மனதை மாற்றுகிறது என்பதை வாசக அன்பர்கள் புரிந்து வாசிக்க வேண்டுகிறோம். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

கல்-மலை. ஓங்கு-உயர்ந்த. கானம்-காடுகளில். மதம் நாறும்-யானையின் மத நீர் மணம் வீசும். கார் வானம்-கரிய மேகத்திடத்து. பெயல்-மழை. தோன்றும்-மென்மையான (தூறல்). இரும் வந்தல்-அடர்ந்த கரிய கூந்தலையுடையவள். பணி-நாம் ஆற்றுமாறு கூறிப் பணித்த சொல்லை. நெஞ்சே-மனமே. எல்லா வினையும்-எல்லா தொழில்களும். கிடப்ப-முற்றுப்பெற்றுநிற்க. எழு-இனி நீ (தலைவியை) காணச் செய்வதற்கு எழுவாயாக.

என்ன சொல்லி ஆற்றுவேன்?

கருங்கால் வரகின் பொரிப்போல் அரும்பு(பு) அவிழ்ந்(து)
ஈர்ந்தண் புறவில் தெறுழ்வீ மலர்ந்தன;
சேர்ந்தன செய்குரி; வாரார் அவரென்று
கூர்ந்த; பசலை அவட்கு. 25

விளக்கவுரை

தெறுழ் மலர்கள் மலர்ந்தன. தலைவர் அறிவித்த நாளும் வந்து விட்டது. பசலை அதிகமாகி விட்டது. தலைவன் வருவேன் என்று சொன்ன காலமும் வந்து விட்டது. ஆனால், வரவில்லையே. இனி என்ன சொல்லி தலைவியை தேற்றுவேன் என்று தோழி திகைப்பதாக இப்பாடல் உள்ளது.

அ.பொ.

ஈர்ந்தண்-குளிர்ச்சிமிக்க. புறவில்-காட்டில். கரும்கால்வரகின்-கரிய தான்னையுடைய வரகினது. பொரிபோல்-பொரியைப்போல. தெறுழ்-தெறுழினது. வீ-மலர்கள். அரும்பு அவிழ்ந்து மலர்ந்தன-அரும்புகள் முகை உடைந்து மலர்ந்தன. செய்குறி-(தலைவரால்) செய்த குறிகள். சேர்ந்தன-வந்து விட்டன.

காடெல்லாம் கார்த்திகை விளக்கு

நலமிகு கார்த்திகை நாட்டவர் இட்ட
தலைநாள் விளக்கில் தகையுடைய வாகிப்
புலமெலாம் பூத்தன தோன்றி; சில மொழி!
தூதொடு வந்த மழை. 26

விளக்கவுரை

மென்மையான மொழிகளை உடையவளே. தோன்றிப் பூக்கள் பூத்துள்ளன. கார்த்திகை திருவிழாவில் நாட்டவர் கொலுத்தி வைக்கம் முதல் நாள் விளக்கைப்போல் இது காட்சி தருகிறது. இடி-மின்னலுடன் மழையும் வந்தது.

ஆகவே, தலைவரும் வந்து விடுவார் என்று தோழி, தலைவிக்கு ஆறுதல்கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள் ளது.

அ.பொ.

வானம்-மேகமானத. முருகு இயம் போல்- குறிஞ்சிப் பாறை போல. முழங்கி இரங்க-இடி முழங்குதலைச் செய்ய. காமமை-காட்டின்கண். குருகு இலை-குருக்கத்தி இலை. பூத்தன-தழைத்தன.

பிரிவு-பிரிவு தலை. ஊடும் யாம் பாராட்ட-நாம் ஊடுதலைப் பாராட் டுதல். பசப்பு-பசலை நோய். பள்ளியுள்-படுக்கையுள். பாயும்-பரவும்.

பள்ளியுள் கிடத்திடும் பசலை

முரு(கு)இயம்போல் வானம் முழங்கி இரங்கக்
குரு(கு)இலை பூத்தன கானம்; - பிரி(வு)எண்ணி
உள்ளா(து) அகன்றார்; என்(று) ஊடியாம் பாராட்டப்
பள்ளியுள் பாயும் பசப்பு. 27

விளக்கவுரை

மூ

அ.பொ.

ம

பொன் குழை போல் பூங்கொத்துக்கள்

இமிழ்இசை வானம் முழங்கக், குமிழின்பூப்
பொன்செய் குழையின் துணர்ந்தூங்கத், தண்பதம்
செவ்வி உடைய சுரநெஞ்சே! காதலிஊர்
கவ்வை அழுங்கச் செலற்கு. 28

விளக்கவுரை

முழங்கும் ஒலியுடைய வானம், இடி முழக்கம் செய்கிறது. குமிழம் பூக்கள் பொன்னால் செய்யப்பட்ட குழை போல் பூத்துக் குலுங்குகின்றன. மனமே... நம் காதலியின் நலம் கெடாமல் இருக்க செல்லும் சமயம் இதுவே... என்று தலைன் தன் நெஞ்சிற்கு கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

இமிழ்இசை-முழங்கும் ஒலியுடைய வானம். முழங்க-இடி முழக்கம் செய்ய. குமிழின் பூ-குமிழம் பூக்கள். பொன்-பொன்னால். செய்-செய்யப்பட்ட. குழையின்-குழைபோல. துணர்-பூங்கொத்துக்கள். தூங்க-தொய்கின. நெஞ்சே-மனமே. காதலி ஊர்-நம் காதலியினது ஊருக்கு. கவ்வை- அலர. அழுங்க-கெட. செலற்கு-நாம் செல்லுதற்கு. தண்பதம்-தக்க.

போர் புரிவன போன்ற மேகங்கள்

பொங்கரும் ஞாங்கர் மலர்ந்தன; தங்காத்
தகைவண்டு பாண்முரலும் கானம்; - பகைகொண்டல்
எவ்வெத் திசைகளும் வந்தன்று; சேறும்நாம்
செவ்வி உடைய சுரம். 29

விளக்கவுரை

சோலைகள் மலர்ந்து வண்டுகள் பாடுகின்றன. மேகங்கள் நெருங்கி போர் புரிவது போல நிற்கின்றன. வந்த வேலையும் முடிந்து விட்டது மனமே... செல்லும் வழியும் சிறப்பாக அமைந்தது. தலைவி வருந்தக் கூடாது. புறப்படுவோம் என்று தலைவன் மனதை நோக்கி கூறுவதாக இப்பாடல் புனையப் பட்டுள்ளது.

அ.பொ.

பொங்கரும்-சோலைகளின். ஞாங்கர்-பக்கமெல்லாம். மலர்ந்தன-பூக்கள் பூத்தன. கானம்-காட்டின் கண்ணே. தங்கா-தங்காது திரியும். தகைவண்டு-அழகுடைய வண்டுகள். பண்-பாட்டை. முரலும்-பாடுகின்றன. பகை-மாறுபாடு போல் (நெருங்கிய). கொண்டல்-மேகங்கள். எத்திசைக்கும்-எல்லா திசைகளிடத்தும். வந்தன்று-வந்தது. சுரம்-அரிய வழிகளும். செவ்வியுடைய-ஒழுங்குடைய. நாம் சேறும்-நாம் செல்லக் கூடுவோம்.

தலைவியின் அறியாமையை தெரிவித்த ஊதைக் காற்று

வரைமல்க, வானம் சிறப்ப, உறைபோழ்ந்(து)
இருநிலம் தீப்பெயல் தாழ, விரைநாற,
ஊதை உளரும்; நறும்தண்கா பேதை
பெருமட நம்மாட்(டு) உரைத்து. 30

விளக்கவுரை

மழைப் பொழிந்து எழுந்த ஊதைக் காற்று. நம் காதலியின் அறியாமையை தெரிவத்து சோலையை விட்டு நீங்காமல் இருக்கிறது. ஆகவே, நாம் செய்வோம் என்று தலைவன் தன் நெஞ்சக்குக் கூறுவதுபோல் இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

வரை மல்க-மலைகள் வானம் நிறைய. வானம் சிறப்ப-வானிடம் சிறப்படைய. உறை-நீர்த் துளிகளால். போழ்து-ஊடறுத்து. தீம்பெயர்-இனிய மழை. தாழ-பொழிய.

எருமை சூடிய பூங்கொடிகள்

கார்ச்சேண் இகந்த கரைமருங்கின் நீர்ச்சேர்ந்(து),
எருமை எழில்ஏ(று) எறிபவர் சூடிச்,
செருமிகு மள்ளரில் செம்மாங்கும் செவ்வி,
திருநுதற் கியாம்செய் குறி. 31

விளக்கவுரை

தூரமும், உயரமும் கொண்ட எல்லையில் நீரையுடைய குளத்தை அடைந்தது அழகிய ஆண் எருமை, பூங்கொடிகளை தன் கொம்புகளில் சூடி மன்னரைப்போல் பெருமிதத்துடன் அது காட்சியளிக்கும். இக்காலமே கார்காலம் தலைவிக்கு சொன்ன (திரும்பி வரும் காலமாக) காலமும் இதுவே. பாகனே தேரை விரைந்து ஓட்டுவாயாக என்று தலைவன் கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

கார்-மேகம். சேண் இகந்த-தூரமும், உயரமும் கொண்ட. மருங்கின்-அவ்வெல்லையின் பக்கத்திலுள்ள. நீர் சேர்ந்து-நீரை யுடைய குளத்தை அடுத்து. எருமை எழில் ஏறு- எருமையில் அழகுடைய ஆண் எருமை. ஏறி-எறியப்பட்ட. பவர்-பூங்கொடிகளை. சூடி-சூடிக் கொண்டு. செருமிகு-மறமிக்க. மன்னரில்-மன்னரைப் போல. செம்மாக்கும்-(மகிழ்ச்சியால்) இறுமாந்திருக்கும்.

பாகனே... மேகங்கள் ஓடுவதைப் பார்

கடாஅவுக பாக!தேர் காரோடக் கண்டே
கெடாஅப் புகழ்வேட்கைச் செல்வர் மனம்போல்
பாடாஅ மகிழ்வண்டு பாண்முரலும்; கானம்
பிடாஅப் பெருந்தகை நற்கு. 32

விளக்கவுரை

அழியாத புகழை விரும்புகின்ற செல்வந்தரைப் போல் பிடவத்திடம் வண்டுகள் பாடி தேனைப் பெறுவதைப் பார்.

மேகங்கள் ஓடுவதையும் பார். நாம் இனி இங்கிருப்பது அழகல்ல. தேரை விரைவாக செலுத்துக... என்று பாகனிடம் தலைவன் கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

கொடாப் புகழ்-அழியாத புகழை. வேட்கை-விரும்புகின்ற. படா-கெடுதல் இல்லாத. மகிழ்வண்டு-மகிழ்ச்சியுடைய வண்டுகள். கானம்-காட்டிடத்து. பிடா-பிடவம். பெருந்தகை-பெருந்தகையானிடத்து. நன்கு-நன்றாக. பாண்-பாட்டினை. முரலும்-பாடும். பாக-பாகனனே. கார் ஓடக் கண்டு-மேகம் ஓடுவதைப் பார்த்து.

கார்காலமே நாம் அறிவித்த குறி

கடல்நீல் முகந்த கமம்சூல் எழிலி
குடமலை ஆகத்துக் கொள்அப்(பு) இறைக்கும்
இடமென, ஆங்கே குறிசெய்தோம்; பேதை
மடமொழி எவ்வம் கெட. 33

விளக்கவுரை

கடலின் நீரை முகத்தை மேகம் மேற்கு மலையில் மழையைப் பொழிகிறது. பேதையாகிய எம் காதலிக்கு யாம் குறித்த காலமாக கார்காலம் இதுவே. ஆகவே, உடனே சென்றாக வேண்டும். பாகனே... தேரை விரைவாகச் செலுத்துவாயாக... என்று தலைவன் கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

கடல்நீர் முகந்த-கடலினது நீரை முகந்த. கமம்-நிறைந்த. சூல்-கருப்பத்தையுடைய. மேகம்-மேகமானது. குடமாலை ஆகத்து-மேற்கு மலையிடத்து. கொள்-தான் கொண். அப்பு-நீரினை. இறைக்கும்-சொரியும். இடம் என-காலமென்று. ஆங்க-அப்பொழுதே. பேதை-பேதையாகிய மடமொழி, மடப்பதி தினையுடைய மொழியையுடையானது. எவ்வம் கெட-வருத்தம் நீங்க.

தலைவர் வராதது ஏனோ?

விரிதிரை வெள்ளம் வெறுப்பப் பருகிப்,
பெருவிறல் வானம் பெருவரை சேரும்,
கருஅணி காலம் குறித்தார்; திருஅணிந்த
ஒள்நுதல் மாதர் திறத்து. 34

விளக்கவுரை

மிக்க பெருமையுடைய வானம் கடல் நீரை நிறைய உண்டு பெரிய மலையை அடையும். அந்தக் காலமே இந்த கார்காலம் உத்தி என்னும் அணியை அறிந்த ஒளி பொருந்திட நெற்றியை உடைய காதலிக்கு (தலைவிக்கு) குறித்த நேரம் இதுதான். ஆனால், கார்காலம் வந்து விட்டது. தலைவன் கூறியபடி வரவில்லையே... நான் என்ன சொல்லி தலைவியை ஆறுதல் படுத்துவேன் என்று தோழியின் கவலை வெளிப் படுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

பெருவிறல்-மிக்க பெருமையுடைய. வானம்-மேகமானது. விரிதிரை-விரிந்த. வெள்ளம்-கடல் நீரை. பெருவரை-பெரிய மலையை. சேரும்-அடையும். கரு அணிகாலம்-கார் காலமே. நுதல்-ஒளி பொருந்திய. குறித்தார்-(தாம் மீண்டும் வருதலைக் குறிபிட்டார்).

என்ன கூறி ஆறுதல் சொல்வேன்?

சென்றநம் காதலர் சேண்இகழ்ந்தார் என்றெண்ணி,
ஒன்றிய நோயொடு இடும்பை பலகூர,
வென்றி முரசின் இரங்கி, எழில்வானம்
நின்றும் இரங்கும் இவட்கு. 35

விளக்கவுரை

தலைவன் பிரிவால் தலைவிக்கு பசலை அதிகமாகி விட்து. இவனுக்காக இரங்கி மழை தொடங்கி கார்காலத்தை அறிவித்துவிட்டது. இன்னும் தலைவர் இதை அறிந்து வராமல் இருக்கிறார். தலைவிக்கு என்னகூறி நான்தேற்றுவேன்? என்று தோழி புலம்புவதாக இப்பாடல் கூறுகிறது.

கார்காலம் வந்து விட்டது. ஆனால் தலைவர் தலைவ னைக் கண்டால்தான் பசலைப் போகும். அந்த தலைவனிடம் உள்ள கவர்ச்சிதான் என்ன? வெறும் உடல் அழகா...? இல்லை அந்த தலைவனுக்கு பின்னால் இருக்கும் தெய்வசக்தி அல்லவா தலைவியை கவர்ந்திழுக்கிறது. அதேபோல் தலைவியைக்

காண தலைவனும் துடிக்கிறான். அவன் உடல் அழகா அவனை ஈர்க்கிறது...? ஒருபோதும இல்லை. அவனுக்குள்ள மறைந்திருக்கும் தெய்வீக சக்திதான் அவனை மயக்குகிறது. அந்தத் தெய்வீக சக்தி இல்லாவிட்டால் உணர்வு ஏது? பற்று ஏது? மகிழ்ச்சிதான் ஏது? ஆகவே, எல்லா இயக்கமும் அந்த தெய்வத்தின் விளையாடல்தான். கார் நாற்பது என்ற இந்த இலக்கியத்தில் பூக்கள் பூத்தன. வானம் மழையைப் பொழிந்தது. கார்காலம் வந்தது தலைவி ஏங்குகிறாள்.

தோழி புலம்புகிறாள் இதையேதான் ஆசிரியர் திரும்ப, திரும்பக் கூறுகிறார். இதை வாசிப்பதால் மனித குலத்திற்கு என்ன நன்மை? என்ற வினாவினை எழுப்பி அதற்கு சரியான விளக்கத்தையும் நாம் கூறி வருகிறோம். சொன்ன செய்தி களையே வாசயுங்கள். ஆனால், எல்லா இயற்கை காட்சிகளி லும், வர்ணனைகளிலும் தெய்வீக சக்தி இயக்குவதை புரிந்து கொண்டு வாசியுங்கள். ஆண், பெண் ஒருவரை விரும்பும் கவர்ச்சி என்பது மிக வேகமானது. இந்த காதல் வேகத்தை இயக்குவதும் அந்த மகா சக்திதான். இதை மனதில் பதிய வைத்துக் கொண்டு இவ்விலக்கியத்தை வாசிப்பதால் நீங்கள் தவம் செய்ததற்கு இணையான செயலை செய்தவர்கள் ஆவீர்கள். ஆசிரியர் கூறிய விஷயத்தையே திரும்ப, திரும்ப பாடலில் கூறுவதால் நாமும் விளக்கவுரையில் எல்லாற்றையும் தெய்வீக சக்தியை முன்நிறுத்திக் கொண்டு இவ்விலக்கியத் தைப் படியுங்கள் என்று திரும்ப, திரும்ப நினைவுபடுத்து கிறோம். சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

சென்ற நம் காதலர்-பிரிந்து சென்ற நம் தலைவர். சேண்-நெடுந்தூரத்தை. இகந்தார்-கடந்து சென்றார். எண்ணி-நினைத்து. ஒன்றிய நோயோடு-பொருந்திய பசலை நோயுடனே. இடும்பை பல-துன்பங்கள். கூர-மிகுதலால். இவட்கு-இவன் பொருட்டு. எழில் வானம்- எழுச்சியுடைய மேகமானது. இரங்கி-இடித்து. நின்றும்-வானத்திருந்தும். இரங்கும்-மழை சொரிந்து நிற்கும்.

ஊர் விருந்து கொண்டாடும் இடம்

சிரல்வாய் வனப்பின வாகி, நிரலொப்ப
ஈர்ந்தண் தளவம் தகைந்தன; - சீர்த்தக்க
செல்வம் மழைமதர்க்கண் சின்மொழிப் பேதைஊர்
நல்விருந்(து) ஆக நமக்கு. 36

விளக்கவுரை

செம்முல்லைகள் பூத்தன. அவை கிச்சிலிப் பறவைகளின் வாய்போல் எழிலுடன் காட்சி தருகின்றன. சிறந்த செல்வத்தை யுடைய மழைபோல் குளிர்ந்த கண்களை உடைய, மென்மை யான மொழிகளையுடைய எம் காதலியின் ஊர் நமக்கு நல்விருந்து கொடுத்து கொண்டாடும். ஆகையால் பாகனே... தேரை விரைவாக செலுத்துக என்று தலைவன் கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

ஈர்ந்தண்-குளிர்ச்சி பொருந்திய. தளவம்-செம்முல்லைப் பூக்கள். சிரல்-கிச்சிலிப் பறவைகள். ஒப்ப-பொருந்த. தகைந்தன-அரும்பின். பேதை-காதலியது ஊர்.

விரைவில் வருவார் தலைவர் கலங்காதே...!

கருங்கடல் மேய்ந்த கமழ்சூழ் எழிலி,
இரும்கல் இறுவரை ஏறி உயிர்க்கும்;
பெரும்பதக் காலையும் வாரார்கொல்? வேந்தன்
அரும்தொழில் வாய்ந்த நமர். 37

விளக்கவுரை

போர்த் தொழிலில் வல்லவரான நம் தலைவர் கார்காலம் தொடங்கியும் வராமல் இருக்கமாட்டார். எப்படியும் விரைவில் வருவார் வருந்தாதே என்று தலைவிக்கு ஆறுதல் கூறுவதாக இப்பாடல் உள்ளது. கருங்கடல் நீரை வானம் முகர்ந்து மழை யைச் சொரியும் கார்காலம் வந்து விட்டது என்ற வர்ணனை பல பாடங்களில் வந்து விட்டது. திரும்ப, திரும்ப ஆசிரியர் இந்த வர்ணனையை கூறுகிறார்.

பூமியில் உள்ள கடல் நீர் வானத்திற்கு சென்று தூய நீராக பொழிகிறது. அதுவும் குறிப்பிட்ட காலத்தில் பொழிகிறது. இதையே கார்காலம் என்று அழைக்கிறோம். தானாக இந்த செயல்கள் காலம் காலமாக நடைபெற்று வருகின்றன. தானாக இந்த செயல்கள் நடைபெறுமா? ஒரு தெய்வீக சக்தி மனித சமுதாயத்தின் நலன் கருதி இதனை தொடர்ந்து இயக்கி வருகிறது. இப்பேருண்மையை இணைத்துக் கொண்டு மழை, இடி, மின்னல் போன்ற இயற்கையை ரசியுங்கள். கார் நாற்பது இலக்கியமே ஒரு வேத நூலாக மாறிவிடும். அப்படி மாற்றி வாசிப்பதுதான் நமக்கு நன்மை. நிலையான பேரின்பம் என்பது தெய்வீகத்தில் இணைப்பதுதான் என்பதை விளக்கவுரையில் மீண்டும், மீண்டும் உங்களுக்கு நினைவுப்படுத்துகிறோம். இச் சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள் ளது.

அ.பொ.

கருங்கடல்-கரிய கடலின் நீரை. மேய்ந்த-பருகிய. கமம்-நிறைந்த. சூல்-கருவினையுடைய. எழில்-மேகமானது. இரும்கல்-பெரிய மலையின். இருவரை-பக்கங்களின மேல். ஏறி-ஏறிச் சென்று. உயிர்க்கும்-நீரைச் சொரியும். பெரும்பத காலையும்-மிக்க நல்ல சமயத்தின் போது. வேந்தன்-அரசனது. அருந்தொழில்-போர்த் தொழில். வாய்த்த-முடிவு (வாய்க்கப் பெற்ற). நமர்-நம் தலைவர். வாரார்கொல்-வாராதிருப்பாரோ (வாராதிரார்).

பிடியோடு விளையாடும் களிறு

புகழ்முகம் பூழிப் புரள, உயர்நிலைய
வெஞ்சின வேழம் பிடியோ(டு) இசைந்தாடும்,
தண்பதக் காலையும் வாரார் எவன்கொலோ?
ஒண்தொடி ஊடு நிலை. 38

விளக்கவுரை

ஆண் யானை பெண் ஆனையுடன் விளையாடி மகிழ் வதைத்தான் பிடியோடு விளையாடும் களிறு என்று சொல்லப் பட்டது. ஆண் யானை, பெண் யானையுடன் விளையாடும்

காட்சியை கண்ட பிறகும் தலைவர் வராதிருக்கமாட்டார். ஆகவே, பிணங்கத் தேவையில்லை தோழி தலைவிக்கு ஆறுதல் கூறுவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

ஆண் யானை, பெண் யானையோடு விளையாடுவதைப் பார்த்ததும் தலைவனுக்கு தன் காதலியின் நினைவு வரும் என்பது இதற்குப் பொருள். காதல் ஜோடியை கண்ட ஒரு வாலிபன் தன் காதலியை நினைக்கிறான். அதேபோல் காதல் ஜோடியை காணும் ஒரு இளம் பெண் தன் காதலனை நினைக் கிறாள். இதையே ஆசிரியர் தம்பாடலில் சான்றுகளாக, வர்ணனைகளாக அளித்திருக்கிறார். இதையெல்லாம் வாசிப் பதால் மனித குலத்திற்கு என்ன நன்மை? என்ற வழக்கமான கேள்வி எழுப்பி விளக்கவுரை தருகிறோம். எல்லா கவர்ச்சி களுக்கும் பின்னால் ஒரு சக்தி இருக்கிறது. ஒரு தெய்வீகம் இருக்கிறது. நாம் காணும் ஆண், பெண் ஆகிய வெளித் தோற்றங்கள் வெறும் தசைகளாலும், எலும்புகளாலும் ஆனவை.

பொம்மலாட்டத்தில் பொம்மைகள் தானாக ஆடுவதைப் போல் வெளியிலிருந்து பார்க்கிறவர்கள் நினைக்கிறார்கள். ஆனால், திரை மறைவிலிருந்து ஒரு சூத்திரதார் அந்த பொம்மைகளை ஆட்டுவிக்கிறார் என்பதே உண்மை. அதே போல் தலைவன்... தலைவியை மையமாக வைத்து காதல் வேகத்தால் இருசாராரும் பிரிவு ஏக்கத்தால் வருந்துவதையும், ஒருவரையொருவர் காண துடிப்பதையும் ஆசிரியர் திரும்ப, திரும்ப தமது பாடலில் குறிப்பிடுகிறார்.

இந்த காதல் வேக உணர்ச்சி என்பது வெறும் சதையின் கவர்ச்சியால் வருவதல்ல. ஒருதெய்வீக சக்தியின் தூண்டுதலால் தான் இவை நிகழ்சின்றன என்ற எண்மையை மனதில் பதிய வைத்து இவ்விலக்கியத்தை வாசியுங்கள். அது உங்களுக்கு பல நன்மைகளை கொடுக்கும். தவம் செய்ததற்கு நிகரான சக்தியை உங்களுக்கு அளிக்கும். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

உயர்நிலைய-உயர்ந்த தன்மையுடைய. வெம்சினம் வேழம்-கடிய கோபத்தினையுடைய ஆண் யானை. புகர் முகம்-புள்ளிகளை யுடைய முகமானது. பூமி புரள-பூமியில் புரளும் நிலையில். பிறயோடு-பெண் யானையோடு. இசைந்து ஆடும்-சேர்ந்து விளையாடும். தண் பதம் காலையும்-தக்க சமயத்தை பார்த்தும். வாரார்-நம் தலைவர் வாரானார். ஒள்தொடி-ஒளி பொருந்திய வளையல் அணிந்தவளே. ஊடுநிலை-(அவருக்காக) பிணங்குவது. எவன்கொல்?-என்ன காரணம்?

பொன்னேர் கட்டினர் உழவர்

அலவன்கண் ஏய்ப்ப அரும்(பு)ஈன்(று) அவிழ்ந்த
கரும்குரல் நொச்சிப் பசும்தழை சூடி,
இரும்புனம் ஏர்க்கடி கொண்டார்; பெருங்கெளவை
ஆகின்று நம்மூர் அவர்க்கு. 39

விளக்கவுரை

தோழி தலைவியிடம் கூறுகிறாள். நொச்சிப் பூவை சூடி உழவர்கள் பொன்னேர் பூட்டினர். நம் தலைவர் மேல் அவர் தூற்றத் தொடங்கினர். அதை நீக்க தலைவர் நிச்சயமாக வருவார் என்று கூறுவதாக இப்பாடல் உள்ளது.

நண்டின் கண்போல் அரும்பை ஈன்ற கரிய பூங்கொத் தினை யுடைய நொச்சிப் பூவை சூடிய உழவர்கள் பொன்னேர் கட்டத் தொடங்கி விட்டார்கள். ஆகையால், நம் ஊரால் தலைவருக்கு பெரிய அலராயிற்று. ஆகவே, அதை நீக்க நிச்சயமாக தலைவர் வருவார் நீ பிணங்க வேண்டியதில்லை என்று தலைவியை தோழி தேற்றுவதாக இப்பாடல் புனையப் பட்டுள்ளது.

அ.பொ.

அலவன் கண்-நண்டின் கண்ணினை. ஏய்ப்ப-ஒப்ப. அரும்பு ஈன்ற-அரும்பினைத் தந்து. கரும்குரல்-கரிய பூங்கொத்தினையுடைய.

நொச்சி-நொச்சியானது. பசும்தழை-பசிய தழையை. சூடி-சூடிக்கொண்டு. இரும்புனம்-பெரிய புனங்களில். ஏர்க்கடி-பொன்னேர் உழ. கொண்டோர்-தொடங்கினார்கள்.

பசலைக்கு மருந்தாக...

வந்தன செய்குறி வாரார் அவரென்று
நொந்த ஒருத்திக்கு நோய்தீர் மருந்தாகி,
இந்தின் கருவண்ணம் கொண்டன்(று) எழில்வானம்;
ஈந்தும்மென் பேதை நுதல். 40

விளக்கவுரை

தோழி தலைவியை சமாதானப்படுத்தும் விதமாக இப்பாடல் உள்ளது. தலைவர் கூறிய காலம் வந்து விட்டது. உன் பசலைக்கு மருந்தாக மேகமும் கருமை நிறத்தைக் கொண்டது. உன் நெற்றி ஒளிமயமாகிறது. பருவத்தை அறியும் தலைவர் நிச்சயமாக வருவார் என்று தோழி தலைவியைப் பார்த்து கூறுவதாக இப்பாடல் உள்ளது.

திரும்ப, திரும்ப கூறிய செய்திகளையே ஆசிரியர் கூறுகிறார். கார் நாற்பதில் இது இறுதிப் பாடல் என்பதால் தலைவன்... தலைவி இருவரும் ஒருவரையொருவர் காணத் துடிக்கும் கவர்ச்சிக்குப் பின்னால் ஒரு தெய்வீகம் விளையாடு வதை மீண்டும் உங்களுக்கு நினைவுபடுத்துகிறோம். இந்நூலை வாசிப்பது உங்களுக்கு தவமாகட்டும். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

மென் பேதை-மென்மைத் தன்மையுடைய பேதையே. செய்குறி-தலைவர் செய்த குறிகள். வந்தன-வந்து விட்டன. அவர் வாரார் என்று-தலைவர் வரமாட்டார் என்று. நொந்த ஒருத்திக்கு-துன்புற்ற உனக்கு. நோய் தீர்-அந்நோயை தீர்க்கும். எழில் வானம்-அழகிய மேகமானது. இந்தின்-ஈச்சம் பழத்தின். கருவண்ணம்-கரிய மேகத்தை.

களவழி நாற்பது

முற்பகலில் சேறாகி பிற்பகலில் பவள புழுதியாகும் இரத்தம்

நாள்ஞாயி(று) உற்ற செருவிற்கு வீழ்ந்தவர்;
வாள்மாய் குருதி களி(று)உழக்கத், - தாள்மாய்ந்து
முற்பகல் எல்லாம் குழம்பாகிப், பிற்பகல்
துப்புத் துகளில் கெழூஉம்; புனல்நாடன்
தப்பியார் அட்ட களத்து. 1

விளக்கவுரை

களவழி என்பது இரண்டு வகையுடையது ஒன்று உழவரின் எக்களத்தின் சிறப்பினைப் பாடுவர். மற்றொன்று புலவரால் போர்க் களத்தைப் பாடுதல். இந்நூல் போர்க்களத்தின் சிறப்பைப் பாடுவதாகும். இவ்விலக்கியத்தை தந்தவர் பொய்கையார். பாண்டிய நாட்டைச் சேர்ந்தவர். இவருடைய காலம் கி.பி. 775-600 ஆகும்.

தமிழர் பண்பாடு என்பது காதல், மானம், வீரம் ஆகிய மூன்று பண்புகளைக் கொண்டது. இதில் வீரம் என்பது மனதில் இருப்பது. மற்றொன்று நாட்டைக் காக்க போரிடுவது. இந்த வீரத்தைப் பறைசாற்ற பொய்கையார் களவழி நாற்பது இலக்கியத்தை நமக்குத் தந்துள்ளார். முதல் பாடலை இப்போது பார்ப்போம்...

போர்க்களத்தில் இரத்தம் பரவி கிடக்கிறது யானைகள் அந்த புழுதியில் கால் வைத்து கலக்குவதால் முற்பகலில் சேறாகிறது பவனப் புழுதியால் நிறைந்து விடும் என்று இப் பாடல் கூறுகிறது.

நீர் நிறைந்த நாட்டையுடைய சோழ மன்னன் தன் பகைவரை போர்க்களத்தில் சந்திக்கிறான். தன் வாளால் பகைவர்களை வெட்டி சாய்கிறான். அப்போது சிந்திய ரத்தத் துளிகள் பூமியில் பரவுகிறது. அந்த பூமியை யானைகள் தங்கள் தாங்காமல் கலக்குகின்றன. அதன் காரணமாக முற்பகலில் ரத்த சேறாக ஆகும் பூமி பிற்பகலில் புழுதியாய் நிறைகிறது என்ற பொருளில் இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

சோழ மன்னனின் வீரம் இப்பாடலில் வெடுப்படுத்தப் படுகிறது. போர்களத்தையே நம் கண்முன் கொண்டு வருவது போல் பொய்கையார் இப்பாடலை தந்திருக்கிறார்.

அ.பொ.

நாள்-காலை. செருவிற்கு-செருவில் வேற்றுமை மயக்ககம். மாய-மறைதல். துகள்-புழுதி பொடி. புனல் நாடன்-நீர் நிறைந்த நாட்டையுடைய சோழன். தபபியார்-பிழை செய்தாரை. களத்து-போர்க்களத்தில். தான் மாய்ந்து-(தன், தன்) காலல் அழுத்தி.

முரசு வெளிப்படுத்தும் இரத்தம்

ஞாட்பினுள் எஞ்சிய ஞாலம்சேர் யானைக்கீழ்ப்
போர்ப்(பு)இல் இடிமுரசின் ஊடுபோம் ஒண்குருதி,
கார்ப்பெயர் பெய்தபின், செங்குளக்கோட்டுக்கீழ்
நீர்த்தூம்பு நீருமிழ்வ போன்ற; புனல்நாடன்
ஆர்த்(து)அமர் அட்ட களத்து. 2

விளக்கவுரை

நீர் வளப்பம் மிகுந்த நாட்டையுடைய சோழ மன்னன் ஆரவாரத்துடன் பகைவரை எதிர்த்துப் போர்புரிந்தான். யானைகளின் கீழே கிழந்த முரசினுள்ளே இரத்தம் புகுந்திருந் தது. மழை பெய்ததால் செங்குளத்தின் நீர் தூம்பு வழிச் செல் வதைப் போல் அந்தக் காட்சி இருந்தது. (மதகுகள் வழியே செல்வது போல் இருந்தது.) என்ற பொருளில் இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

வெற்றி முரசு கொட்டி வந்த பகைவர்களின் முரசு கழிந்து போர்க்களத்தில் விழுந்தது. அங்கே கொட்டிய இரத்தம் கிழிந்த முரசுக்குள் புகுந்தது. மழை பொழிந்ததால் அது செங்குளம் போல் காட்சி தந்தது. ஆசிரியரின் வர்ணனை நம்மை வியக்க வைக்கிறது. இந்தப் போர்க்கள காட்சியை நம் முன் ஏன் நிறுத்துகிறார் கவி? சோழ மன்னனின் வீரத்தை பறைசாற்ற விரும்பினாரரா? அதர்ம முறையில் வலுச் சண்டைக்கு வருவோர் கதி இப்படித்தான் ஆகும் என்பதை உணர்த்துகிறாரா...? எதிர்கால சந்ததயினர் போர்க்களம் என்றால் அது எப்படி இருக்கும்? என்பதை உணர்த்த இப் பாடல்களை புனைந்தாரா? இவ்வினாக்களுக்கு பதிலை நீங்களே சிந்தியுங்கள். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

ம

யானைக் கொம்புகள் ஊன்று கோலாயின்

ஒழுக்கும் குருதி உழக்கித் தளர்வார்,
இழுக்கும் களிற்றுக் கோ(டு)ஊன்றி, எழுவார்;
மழைக்குரல் மாமுரசின் மல்குநீர் நாடன்
பிழைத்தாரை அட்ட களத்து. 3

விளக்கவுரை

போர்க்களத்தில் இரத்த வெள்ளம் ஓடுகிறது. அந்த ரத்த வெள்ளத்தை கடந்து செல்ல முயல்பவர்களின் கால்கள் வழுக்குகின்றன. தளர்ச்சியடைகின்றன. ஆகையால், அங்குள்ள யானைகளின் கொம்புகளை ஊன்றுகோலாகக் கொண்டு அந்த இரத்த வெள்ளத்தை விட்டு கரையேறுவார்கள்... என்ற பொருளில் இப்பாடல் அமைந்துள்ளது.

மேகத்தின் முழக்கத்தைப் போல பெரிய முரசுகளை யுடைய, மிகுந்த நீர் வளமும் கொண்ட நாட்டினை யுடைய சோழன் தம்பியவரை கொன்ற அப்போர்க்களத்திலே ரத்தம் வழிந்தோடும். அந்த ரத்தப் பாதையை கடக்கும் வீரர்கள் கலங்குவார்கள். சேரர் வாடவார்கள். பூமி வழுக்கும். அந்த நிலையில் அங்கு வெட்டுண்டு கிடக்கும் யானைக் கொம்புகளை ஊன்றி எழுந்து நடந்து செல்வார்கள் என்ற பொருளில் இப் பாடல் புனையப்பட்டுள்ளது.

போர்க்களத்தில் ரத்த ஆறு... வெட்டுண்டுக் கிடக்கும் யானைத் தலைகள்... வீரர்கள் ரத்த வெள்ளத்தில் நடக்க முடியாமல் தளருதல். ஏற்கனவே, வெட்டப்பட்டுகிடக்கும் யானைக் கொம்புகளை ஊன்று கோலாக்கி சிரமப்பட்டு நடந்து கடந்து செல்லுதல் ஆகியவை நம்முன்னே நிழல் படம் போல் காட்டுகிறார் ஆசிரியர்.

இதனைப் பார்ப்பதனால் நமக்கு என்ன கிடைக்கிறது...? சோழனின் மாபெரும் வீரத்தை பாராட்டத் தோன்றுகிறதா..? தமிழனின் வீரத்திற்கு சான்றுகளாய் இப்போர்க்களங்கள் திகழ்ந்தன என்பதை சிந்திக்க வைக்கிறதா...? தமிழர்கள் தங்களுக்குள்ளே பகைமையை வளர்த்துக் கொண்டு செத்து மடிந்ததை கண்டு மனம் கலங்குகிறதா...? இதை நீங்களே

முடிவு செய்யுங்கள். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

மழை குரல்-மேகத்தின் முழக்கத்தைப் போன்ற. மாமுரசின்-பெரிய முரசுகளையுடைய. மல்குநீர் நாடன்-மிகுந்த நீர் வளப்பமுடைய நாட்டினையுடைய சோழன். பிழைத்தாரை-தப்பியவரை. அட்ட-கொன்ற. களத்து-போர்க்களத்து. ஒழுக்கும்-வழிந்து ஒழுகுதலைச் செய்யும். குருதி-இரத்தத்தை. உழக்கி-கலக்குதலால். தளர்வார்-சோர்வுறுவோரை. இழுக்கும்-வகுக்குதலைச் செய்யும். களிற்றுக்கோடு-(அவர் அங்கு வெட்டுண்டு கிடக்கும் யானைக் கொம்புகளை ஊன்றி எழுவது).

தேரை முறித்த யானை

உருவக் கடுந்தோர் முருக்கி, மற்(று) அந்தேர்ப்
பருத்தி சுமந்(து)எழுந்த யனை, - இருவிசும்பில்
செல்சுடர் சேர்ந்த மலைபோன்ற; செங்கண்மால்
புல்லாரை அட்ட களத்து. 4

விளக்கவுரை

செங்கண்மால் சோழன் பகைவரை கொன்ற போர் களத்தில் அவனுடைய யானைப் படை எதிரிகளின் தேரை முறித்துப் போடுகிறது. அத்தேரின் உருளையை அந்த யானைகள் சுமக்கும் அந்த காட்சி சூரியன் மலையை அடைந்தது போன்ற காட்சியாக இருக்கிறது என்று இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

ஆசிரியரின் போர்க்களத்து வர்ணனைகள் மிகவும் நயமாக உள்ளது. சோழனின் யானைப் படைகள் எதிரிகளின் தேரை முறித்துப் போட்டதோடு அத்தேரின் உருளைகளை சுமக்கிறதாம். அந்தக் காட்சி சூரியனும், மலையும் இணைந்தது போல் காட்சி தருகிறதாம். தமிழ இலக்கியத்தைத் தவிர வேறு இலக்கியங்களில் இப்படிப்பட்ட வர்ணனைகள், கற்பனைகள் இருக்குமா? என்பது ஐயத்திற்குரியதே. மகாபாரதத்தில் கண் பார்வை யற்ற மன்னன் திருதராட்டிரனுக்கு அவனுடைய மந்திரி சஞ்சயன் இருந்த இடத்தில் இருந்து கொண்டே போர் களத்தில் நடப்பவைகளை கூறினானாம். அதேபோல் பொய்கையார் இப்போது வாழும் தமிழர்கள் அறியவேண்டும் என்பதற்காக களவழி நாற்பது தமிழிலக்கியத்தை நிழற்படம்

போல் நமக்கு தந்திருக்கிறார் என்றே தோன்றுகிறது. இச் சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல்.

அ.பொ.

செங்கண்மால்-செங்கம் சோழன். புல்லாரை-பகைவரை. அட்ட-கொன்ற களத்து. உருவ-அஞ்சத்தக்க. கூடுதேர்-விரைவுடைய தேர். இரு விசும்பு இல்-பெரிய வானத்தில்.

நிறம் மாறிய காக்கைகள்

தெரிகணை எஃகம் திறந்தவாய் எல்லாம்
குருதி படிந்(து)உண்ட காகம், - உருஇழந்து,
குக்கில் புறத்த சிரல்வாய்; செங்கண்மால்
தப்பியார் அட்ட களத்து. 5

விளக்கவுரை

செங்கம் சோழன் தப்பியோடிய பகைவர்களை கொன்ற போர்க்களத்தில் அம்புகளாலும், வேல்களாலும் பகைவர்கள் வீழ்ந்தனர். அவர்களின் உறுப்புகளிலிருந்து (குருதி) இரத்தம் வடிந்தது. அதைப் பருகிய காக்கைகளின் நிறம் மாறியது. உடல் செம்போத்தை நிறத்தையும், அலக கிச்சில பறவையாகவும் உருமாறியது என்று இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

செங்கண்மால்-செங்கம் சோழன். தப்பியார்-பிழைத்தார். அட்ட-கொனற். களத்து-போர்க்களத்து. தெரி-ஆராய்ந்த. களை-அம்பு. எஃகம்-வேல்கள்.

அடுக்கப்பட்ட யானையின் உடல்கள்

நானால் திசையும் பிணம்பிறங்க, யானை
அடுக்குபு ஏற்றிக் கிடந்த; - இடித்(து)உரறி
அங்கண் விசும்பின் உரும்எறிந்(து), எங்கும்
பெருமலைத் தூ(று)எறிந்(து) அற்றே; அருமணிப்
பூணேந்(து) எழின்மார்(பு) இயல்திண்சேர்ச் செம்பி யன்தெவ்
வேந்தரை அட்ட களத்து. 6

விளக்கவுரை

அரிய மணிகள் பதித்த அணிகலன் அணிந்தவன். எழில் மார்புடையவன். வலிமையான தேரையுடைய செம்பியன்

(சோழன்) பகை அரசரை வீழ்த்திய போர்க்களத்தில் வீழ்ந்த யானைகள் ஒன்றோடொன்று அடக்குகளாக இருந்தன. அந்தக் காட்சி பெரிய மலை மேலே இடிவிழுந்து புதர்களை பெயர்த்தெரிந்ததைப் போல இருந்தனவாம். இப்பொருளில் இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

அருமணி-அரிய மணிகள். ஏந்து-(விளங்கும்படி) ஏந்திய. திண்-வலிமையுடன். தெவ்வேந்தரை-பகை அரசரை.

இரத்த கறையுடன் யானைகள்

அஞ்சனக் குன்(று)ஏய்க்கும் யானை, அமருழக்கி,
இங்கு லிகக்குன்றே போல்தோன்றும்; - செங்கண்
வரிவரால் மீன்பிறழும் காவிரி நாடன்
பொருநரை அட்ட களத்து. 7

விளக்கவுரை

சிவந்த கண்களையும், புள்ளிகளுடைய வரால் மீன் பிறழும் காவிரி பாயும் நாட்டையுடைய சோழன் தன்னோடு போரட்டவரை கொன்ற போர்க்களத்திலே இரத்தக்கரை படிந்த யானைகள் நின்ற கோலம் செந்தூர மலைகளைப் போல் காட்சி தந்தன என்ற பொருளில் இப்பாடல் புனையப் பட்டுள்ளது.

அ.பொ.

செம்கண்-சிவந்த கண். வரி-புள்ளிகளையுடைய. பொருநர்-போர் புரிவோரை. அட்ட-கொன்ற.

அம்புகளால் மறைக்கப்பட்ட யானை

யானைமேல் யானை நெரிதர ஆனாது,
கண்நேர் கடுங்கணை மெய்ம்மாய்ப்ப; - எவ்வாயும்
எண்அருங் குன்றில் குரீஇஇனம் போன்றவே;
பண்ஆர் இடிமுரசின் பாய்புனல் நீர்நாடன்
நண்ணாரை அட்ட களத்து. 8

விளக்கவுரை

அலங்கரிக்கப்பட்ட இடி ஒலி போல முரசு முழங்கு கிறது. அந்த ஒலிபோல் காவிரி சப்தம் செய்து பாய்கிறது.

அத்தகைய காவிரி நாடனாகிய சோழன் பகைவரை கொன்ற போர்க்களத்திலே யானைகள் மீது எய்யப்பட்ட அம்புகள் யானையின் உடல் முழுவதையும் மறைத்தனவாம். அந்தக் காட்சி மலைகளின் மேல் குருவிக் கூட்டங்கள் அமர்ந்து மலையையே மறைத்தது போன்று இருந்ததாம். என்னே கற்பனை நயம் என்று வியக்கும்படியாக இப்பாடல் புனையப் பட்டுள்ளது.

அ.பொ.

பண் ஆர்-அலங்கரிக்கப்பட்ட. இடி இரசு இல்-இடி ஒலிபோன்ற முசினைப் போல். பாய்புனல்-பரந்து செல்லும் காவிரி. அட்ட-கொன்ற. கணை-கூர்மையான அம்புகள்.

வெட்டப்பட்ட கால்கள், சுறா மீனை ஒத்திருந்தன

மேலோரைக் கீழோர் குறுகிக் குறைத்திட
காலார்சோ(டு) அற்ற சுழற்கால், இருங்கடல்
ஊனில் சுறபிறழ்வ போன்ற; புனல்நாடன்
நேராரை அட்ட களத்து. 9

விளக்கவுரை

நீர்வளமுடைய நாட்டை யுடைய சோழன் பகைவரை கொன்ற போர்க்களத்தில் வெட்டுண்ட கால்கள் கிடந்தன. (யானை, குதிரை, தேர் ஆகியவற்றின் மேல் இருந்தோரை கீழே இருந்த காலாட்கள் வெட்டி துணித்தவை) வீரக்கழல் அணிந்த வெட்டுண்ட கால்கள் கடலில் சுறாமீன்கள் பிறழ் வதைப்போல் இருந்தன என்ற பொருளில் இப்பாடல் புனையப் பட்டுள்ளது.

அ.பொ.

ம

கண்ணில்லாத யானை

பல்கணை எவ்வாயும் பாய்தலால் செல்கலா(து),
ஒல்கி உயங்கும் களிறெல்லாம், - தொல்பிறப்பில்
செவ்வல்அம் குன்றம்போல் தோன்றும், புனல்நாடன்
தெவ்வரை அட்ட களத்து. 10

விளக்கவுரை

கலங்காத தன்மையுடைய செங்கம் சோழன் பகைவரை கொன்ற போர்க்களத்தில் வலிமை இழந்து போர் முரசங்களை

விட்டு ஓடினர். ரத்தத்தில் தோய்ந்த யானை அது முரசம் என்று அறியாமலேயே காலால் உதைக்கிறது. ஏனெனில் ஆயுதங்களின் பட்டு அதன் கண் பறிபோனது. பார்வையற்ற யானை பயனில்லாத முரசை உதைக்கிறது. அந்த ஒலி மேகத்தால் தோன்றும் இடிபோல் முழங்கியதம் கவியின் கற்பனை நயம் சிறப்பானது.

அ.பொ.

அதிராப்போர்-கலங்காத தன்மை கொண்ட போரையுடைய. செங்கண்மால்-செங்கம் சோழன். அட்ட-கொன்ற. களத்து-போர்க்களத்தில் கழுமிய-நெருங்கிய ஞாட்பினுள்-போரில் மைந்து-வலி. இகந்தார்-இழந்தவர்கள். இட்ட-விட்டுவிட்ட. ஒழி-உபயோகமற்ற. முரசம்-முரசங்கள். ஒன் குருதி-புதிய இரத்தத்தில். ஆடி-தோய்ந்து.

செம்மண் குன்றுகளான யானை

கழுமிய ஞாட்பினுள் மைந்(து)இகந்தார், இட்ட
ஒழிமுரசம், ஒண்குருதி ஆடித், - தொழில்மடிந்து,
கண்காணா யானை உதைப்ப, இழுமென
மங்குல் மழையின் அதிரும்; அதிராப்போர்ச்
செங்கண்மால் அட்ட களத்து. 11

விளக்கவுரை

நீர்வளப்பமுள்ள நாட்டையுடைய சோழன் பகைவரைக் கொன்ற போர்க்களத்தில்... பல அம்புகள் உதைப்பு முழுவதும் பாய்ந்ததால் மேலே செல்ல முடியாமல் வருந்த நிற்கும் காட்சி செம்மன் குன்றுகளைப் போல் காட்சியளிப்பதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

புனல் நாடன்-நீர் வளப்பமுள்ள நாட்டையுடைய சோழன். தெய்வரை-பகைவரை. அட்ட-கொன்ற. பங்கணை-பல அம்புகள் ஓங்கி-தளர்ந்து. உயங்கும்-வருந்தும்.

செம்மண் குன்றில் மழை சொரிய...

ஓவாக் கணைபாய, ஒல்கி, எழில்வேழம்
தீவாய்க் குருதி இழிதலால், செந்தலைப்
பூவல்அம் குன்றம் புயற்(கு)ஏற்ற போன்றவே;
காவிரி நாடன் கடாஅய்க் கடிதாகக்
கூடாரை அட்ட களத்து. 12

விளக்கவுரை

காவிரியின் வளம் பெற்ற நாட்டையுடைய சோழன், பகைவரைக் கொன்ற போர்க்களத்தில் இடைவிடாமல் அம்பு பாய்ந்ததால் மேலே செல்ல முடியாமல் ரத்தம் ஒழுக நிற்கிறது. அந்தக் காட்சி செம்மண் குன்றில் மழை பொழிந்து வழி வதைப் போல் காட்சி தருவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

யானையின் உடலிலிருந்து இரத்தம் வழிகிறது. செம் குன்றில் மழை பொழிந்து அந்நீர் கீழே வழிகிறது. இவ்விரண்டையும் ஒன்றாக்கி பார்க்கிறார் கவி. இந்த கற்பனை வளத்திற்கு பின்னால் ஒரு தெய்வீக சக்தி அவரை இயக்கியிருக்கிறது என்றே சொல்லவேண்டும். தெய்வ அவதாரங்களை ஸ்ரீராம பிரானும், ஸ்ரீகிருஷ்ணபகவானும் கூட நீதியை நிலைநிறுத்த போர்க் களமே முடிவு என்று கருதி போர் செய்தார்கள். அதேபோல் தமிழகத்து மன்னர்கள் தங்களுக்குள் ஒற்றுமை இல்லாமல், யார் பெரியவர் என்ற நினைப்போடு போர்க் களத்தையே தேர்ந்தெடுத்தார்கள் என்பது தெரிய வருகிறது. தமிழன் எவருக்கு அடிபணிந்து போகமாட்டான். மரணத்தை வரவேற்பானே ஒழிய பணிந்து போக மாட்டான் என்பதை இந்தப் போர்க் களங்களில் நமக்கு நினைவுபடுத்துகின்றன. இந்த வீரத்திற்குப் பின்னாலும் ஒரு தெய்வீகம் இருப்பதை எண்ணிப் பார்த்து இப்போர்கள காட்சிகளை வாசிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

அ.பொ.

கூடாரை-பகைவரை. அட்ட-கொன்ற. பாய-தைக்க. செம்தலை-சிவந்த இடத்தையுடைய. பூவல் குன்றம்-செம்மண் மலைகள். புயற்கு-மழைக்கு. ஏற்ற-எதிர்ந்ததை.

இடி ஒலி கேட்ட நாகம் போல

நிரைகதிர் நீள்எஃகம் நீட்டி, வயவர்
வரைபுரை யானைக்கை நூற, - வரைமேல்
உரும்எறி பாம்பின் புரளும்; செருமொய்ம்பின்
சேஎய்பொரு(து) அட்ட களத்து. 13

விளக்கவுரை

வலிமையுடைய சோழன் போரிட்டு பகைவரை கொன்ற போர்க்களத்தில் வீரரகள் வாளால் யானையின் துதிக்கை

களை வெட்டி வீழ்த்தினார். அந்த துதிக்கைகள் துண்டாகி துடித்தன. அந்த காட்சி இடி கேட்ட நகம் நடுங்கி துடிப்பதைப் போல் இருந்தது என்று இப்பாடல் புனையப் பட்டுள்ளது.

அ.பொ.

செரு-போர். மொய்ப்பின்-வலிமையுடைய. சேர்-சோழன். பொருது-போரிட்டு. அட்ட-கொன்ற. வயவர்-வீரர்கள். நிரைகதிர்-திரண்ட ஒளியுடைய. நீர்-நீண்ட. எஃகம்-வாளை. நீட்டி-செலுத்த. வரைவுரை-மாலையை ஒத்த. யானைக் கை- யானைகளின் கைகளாகிய துதிக்கைகளை.

பவளம் சொரிவதைப் போல

கவளம்கொள் யானையின் கைதுமிக்கப் பட்டுப்,
பவளம் சொரிதரு பைபோல், - திவளொளிய
ஒண்செங் குருதி உமிழும்; புனல்நாடன்
கொங்கரை அட்ட களத்து. 14

விளக்கவுரை

நீர் வளப்பமுடைய நாட்டையுடைய சோழன், கொங்கு நாட்டவரை பொன்ற போர்க்களத்தில் கவனம், வனமாக உணவை கொள்ளும் யானைகளின் துதிக்கைகள் வெட்டப் பட்டன. அந்த துதிக்கைகளிலிருந்து ஓழுகிய (செங்குருதி) சிவப்பு ரத்தம் பவளத்தை சொரியும் பை போல் காட்சியளிப் பதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

புனல் நாடன்-நீர்வளமுள்ள நாட்டையுடைய சோழன். கொங் கரை-கொண்டு நாட்டவரை. கவனம் கொள்-கவனம், கவனமாக உணவைக் கொள்ளும். துபிக்கப்பட்டு-துணிக்கப்பட்டு. பவளம்-பவளத்தை. சொரிதம்-சொரிகின்ற. பை போல-பையைப் போல. திவள் ஒளிய-மிக்க ஒலியுடைய. ஒளி-ஒளி பொருந்திய.

வெண் கொற்ற குடைகளின் நிலைகள்

கொல்யானை பாயக், குடைமுருக்கி எவ்வாயம்
புக்கவாய் எல்லாம் பிணம்பிறங்கத் - தச்சன்
வினைபடு பள்ளியில் தோன்றுமே; செங்கண்
சினமால் பொருத களத்து. 15

விளக்கவுரை

தச்சுர் தொழில் செய்பவன் ஒரு தொழிலாளி அவன் வேலை செய்யும்போது உதவி செய்யும் கருவிகள் ஆங்காங்கு கிடக்கும் காட்சிபோல் போர்க்களத்தில் வெண் கொற்ற குடைகள் சிதைந்து கிடந்தனவாம். பிணங்களைப் போல் எல்லா பக்கமும் சிதறி கிடந்தனவாம் இதனை கூறும் பாடல் இது.

கோபத்தை உடைய செங்கம் சோழன் போர் செய்த போர்க்களத்தில் கொல்லும் யானைகள் பாய்வதனால் குடைகள் சிதறி விழுந்தன. அந்தக் குடைகள் எல்லா பக்கங்களிலும் பிணங்கள் போல் காட்சியளித்தன என்ற பொருளில் இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

சினம்-கோபத்தையுடைய. செங்கண்மால்-செங்கம் சோழன். எவ்வாவும்-எல்லா இடங்களிலும். கொல்யானை-கொல்லும் யானைகள். பாய்-பாய்தலினால். குடை முருக்கி-குடைகளை அழித்தும். புக்கவாய் எல்லாம்-புகுந்த இடங்களில் எல்லாம்.

வேங்கைப் புலிகள் பாய்வது போல

பரும இனமாக் கடவித், தெரிமறவர்
ஊக்கு எடுத்த அரவத்தி ஆர்ப்(பு) அஞ்சாக்
குஞ்சரக் கும்பத்துப் பாய்வன; குன்(று) இவரும்
வேங்கை இரும்புலி போன்ற; புனல்நாடன்
வேந்தரை அட்ட களத்து. 16

விளக்கவுரை

நீர் வளப்பம் நிறைந்த நாட்டையுடைய சோழன், பகை அரசர்களை கொன்றப் போர்க்களத்தில் சேணம் பூட்டப் பட்ட குதிரைகள் வீரர்களின் உற்சாகத்தால் அஞ்சாத யானை களின் மத்தகத்தின் மேல் பாய்கின்றன. அந்தக் காட்சி மலை மீது வேங்கை பாய்வது போல் காட்சி தருவதாக இப்பாடல் உள்ளது.

யானைகளின்மேல் மோதும் அறைக்கு குதிரைகள் வேகம் கொண்டிருந்தன என்பது நல்ல கற்பனை நயமானது.

அ.பொ.

புனல் நாடன்-நீர்வளப்பமுள்ள நாட்டையுடைய சோழன். பருமம்-சேணம் பூட்டப்பட்ட. இனம்மா-மிகுந்த குதிரைகள். தெரி-தெரிந்த. மறவர்-வீரர்களால். கடவி-செலுத்தற்கு. ஊக்கி எடுத்த-உற்சாகமூட்டி எழுப்பப்பட்ட. அரவத்தின் ஆர்ப்பு-மிக்க ஆரவாரத்திற்கு. குஞ்சரம்-யானைகளின்.

கார்த்திகை தீப காட்சி போல...

ஆர்ப்(பு)எழுந்த ஞாட்பினுள் ஆளான் எதிர்த்(து) ஓடித்
தாக்கி எறிதர, வீழ்தரும் ஒண்குருதி
கார்த்திகைச் சாற்றில் கழிவிளக்கைப் போன்றனவே;
போர்கொடித் தானைப் பொருபுனல் நீர்நாடன்
ஆர்த்(து)அமர் அட்ட களத்து. 17

விளக்கவுரை

போருக்குரிய உடைய கொடியை உடைய நீர்வளம் மிக்க நாட்டையுடைய சோழன் ஆரவாரித்து பகைவரைக் கொன்ற போர்க்களத்தில் வீரர்கள் ஒருவரை யொருவர் தாக்குவதால் அவர் அங்கங்களிலிருந்து இரத்தத்தை ஒழுகச் செய்கிறது. அந்தக் காட்சி கார்த்திகை தீபங்களைப் போல் இருப்பதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

வீரர்கள் ரத்தம் ஒழுக காட்சியளிப்பது கார்த்திகை விளக்குகளாக சித்தரிக்கிறார் கவி. ஆம்... உடலில்தான் ரத்தம் வடிகிறது. ஒருவேளை உடல் கீழேவிழுந்து மடிந்து போகலாம். ஆனால் அந்த வீரர்களின் தெய்வ ஒளி, அழியாத ஒளி கார்த்திகைத் தீபங்கள்தான். மிக பொருத்தமான உவமையை கவி நினைவுபடுத்தியிருக்கிறார். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

போர்-போர்க்குரிய. கொடி-கொடியையுடைய. தானை-படைகளைக் கொண்டவனுக்கு. பொரு-மோதுகின்ற. ஞாட்பின்உள்-போரின் கண். ஆள்ஆள்-வீரரும் வீரரும்.

அலைகள் இழுக்கும் தோணி போல...

நளிந்த கடலுள் திமில்திரை போலெங்கும்
விளிந்தார் பிணங்குருதி ஈர்க்கும்; - தெளிந்து
தடற்றிடம் கொள்வாள் தளைஅவிழும் தார்ச்சேய்
உடற்றியார் அட்ட களத்து. 18

விளக்கவுரை

ஒளி விளங்கி நிற்கும் உறைவிடத்தைத் கொண்டவன். வீர வாள் கொண்டவன். மாலை சூடியவன். இத்தகைய சிறப்புகளைப் பெற்ற சோழனை கோபத்திற்குள்ளாக்கிய பகைவரை பொன்ற போர்க்களத்தில் தோணி போலவும், அலைகள் போலவும் விணங்கள் குருதி ஒழுகியபடி கிடந்தன. அந்தக் காட்சி கடல் அலைகள் கரையில் உள்ள தோணியை இழுத்திரும் காட்சிபோல் இருப்பதாக இப்பாடல் புனையப் பட்டுள்ளது.

ரத்த வெள்ளம் அலைகடல் போலவும், பிணங்கள் தோணிகள் போலவும் கற்பனை செய்திருப்பது கவியின் கற்பனை திறனுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்கிறது.

அ.பொ.

தெளிந்து-ஒளி விளங்கி நிற்கும். கொள்-உறையிடத்தை கொண்ட. வாள்-வாளினையும். தார்-மாலையினையும். சேய்-சோழன். உடற்றியார்-சினமூட்டியபகைவர். நளிந்த-நீர் செறிந்த. திமில்-தோணியையும். திரை-அலையையும்.

மூன்று கொம்புகளை உடையதாகிய யானை

இடைமருப்பின் விட்(டு)எறிந்த எஃகம், கால் மூழ்கிக்
கடைமணி காண்வரத் தோற்றி, - நடைமெலிந்து,
முக்கோட்ட போன்ற களிறெல்லாம் நீர்நாடன்
புக்(கு) அமர் அட்ட களத்து. 19

விளக்கவுரை

நீர் வளப்பம் நிறைந்த நாட்டையுடைய சோழன் போரில் புகுந்து பகைவரை அழித்த போர்க்களத்தில் வீரர்களால் வீசப்பட்ட வேல் யானையின் இடு தந்தங்களில் நடுவே பாய்ந் தது. அந்த காட்சி முக்கொம்பு உடைய யானை போல் காட்சி யளித்தது என்ற பொருளில் இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

யானையை தாக்க வந்த வேல் மற்றொரு கொம்பு போல் காட்சி தந்தது என்ற கற்பனை நயம் சிறப்பானது.

அ.பொ.

நீர் நாடன்-நீர் வளப்பம் நிறைந்த நாட்டையுடைய சோழன். அமர்புக்கு-போரில் புகுந்து. எஃகம்-வேலின். மருப்பின்-தந்தங்களின்.

கால்மூழ்கி-(நுனி) காம்பு உட்புகுதலால். கடைமணி-(அவ்வேலின்) கடைப்பகுதி.

கழுகும் பிணமும்

இருசிறகர் ஈர்க்குப் பரப்பி, எருவை
குருதி பிணம்கவரும் தோற்றம், - அதிர்விலாச்
சீர்முழாப் பண் அமைப்பான் போன்ற புனல்நாடன்
நேரா‌ரை அட்ட களத்து. 20

விளக்கவுரை

நீர் வளப்பமுடைய நாட்டையுடைய சோழன் பகைவரை கொன்ற போர்க்களத்தில் கழுகள் சிறகுகளை பரப்பிக் கொண்டு பிணங்களைத் தின்னும் காட்சி முழவு வாசிப்பதைப் போல் இருப்பதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

சோழனுடைய வீரத்தை பறைசாற்ற கவி பல கற்பனை காட்சிகளை நம் கண்முன் நிறுத்துகிறார். சோழனின் வாளின் முன் பகைவர்கள் வீழ்ந்து பட்டதை ஒவ்வொரு பாடலும் விளக்குகிறது.

அ.பொ.

புனல் நாடன்-நீர்வளப்பம் நிறைந்த நாட்டையுடைய சோழன். நேரா‌ரை-பகைவரை. எருவை-கழுகுகள். இரு சிறகர்-இரண்டு சிறகிட முள்ள. ஈர்க்கு பரப்பி-காக்கைப் போன்ற இறகுகுகளைப் பரப்பிக் கொண்டு. குருதி-உதிரத்தோடு. பிணம்-பிணங்களை. கவரும்-அகப் படுத்தும். தோற்றம்-காட்சியானது.

குன்றாக மாறிய யானை

இணைவேல் எழில்மருமத்(து), இங்கப், புண் கூர்ந்து
கணைஅலைக்(கு) ஒல்கிய யானை,-துணையிலவாய்த்
தொல்வலி ஆற்றித் துளங்கினவாய், மெல்ல
நிலம்கால் கவரும் மலைபோன்ற; செங்கண்
சினமால் பொருத களத்து. 21

விளக்கவுரை

யானையின் உடலில் வேல் பாய்கிறது. அது மிகவும் புண்படுகிறது. பாகன் இல்லை. கால்கள் வலு விழந்து யானை சாய்கிறது. அந்த புண்பட்ட யானை அந்த சமயத்தில் ஒரு சிறிய குன்று போல் காட்சியளிப்பதாக இப்பாடல் புனையப் பட்டுள்ளது.

கோபத்தையுடைய செங்கம் சோழன் போர் செய்த களத்தில், ஒத்தவேல்கள் பல பாய்ந்ததால் துணையை இழந்து, பாகனாய் இழந்து தளர்ந்து விழுந்தது. அந்த நிலையில் சிறு குன்றுபோல் அது காட்சி அளித்தது என்ற பொருளில் இப் பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

சினம்-கோபத்தையுடைய. பொருத-போர் செய்க. இணைவேல்-ஒத்த வேல்கள். மருமத்து-மார்பில். ஒல்கிய-தளர்ந்த. தொல்வலி-பழமை (முன்) வலியை. ஆற்றி-பொறுத்து. துளங்கினவாய்-நடுங்கிய வாறு. மெல்ல-மெதுவாக. நிலம்-பூமினது.

மதியை மறைக்கும் மாநாகம்

இருநிலம் சேர்ந்த குடைக்கீழ் வரிநுதல்
ஆ(டு)இயல் யானைத், தடக்கை ஒளிறுவாள்
ஓடா மறவர் துணிப்பத், துணிந்தவை
கோடுகொள் ஒண்மதியை நக்கும்பாம்(பு) ஒக்குமே;
கூடாரை அட்ட களத்து 22

விளக்கவுரை

போர்க்களத்தில் வீரர்கள் விட்டுப் போன குடைக்கீழ் வெண்டுண்டு கிடக்கும் யானையின் துதிக்கை மதியை மறைத்த நாகப் பாம்பைபோல் இருந்தது என்ற பொருளிலே இப்பாடல் உள்ளது.

இடி போன்ற முரசினையுடைய, பரந்த நீர்மிகுந்த காவிரி ஆற்றையுடைய சோழன் பகைவரை கொன்ற போர்க்களத்தில் புறங்கெடாத வீரர்கள் நிறைந்த நெற்றியையும், அசை தலையும் உடைய யானையின் துதிக்கை துண்டிக்கப்படுகிறது. அந்த துதிக்கை ஏற்கனவே விழுந்து கிடக்கும் குடைகளின் அருகிலே விழுகிறது. அந்த காட்சி ஒளிபொருந்திய சந்திரனை தீண்டும் நல்ல பாம்பு போல் இருந்தது என்று இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

பாடு ஆர்-ஒளி நிறைந்த. இடி-இடி போன்ற முரசின்-முரசினை யுடைய. பாய்புனல்-பரந்த நீர் மிகுந்த. கூடாரை-பகைவரை. அட்ட-கொன்ற.

சிவந்த வானத்தில் கருமுகில் போல...

எற்ற வயவர் எறிய, நுதல்பிளந்து,
நெய்த்தோர்ப் புனலுள் நிவந்தகளிற்(று) உடம்பு,
செக்கர்கொள் வானில் கருங்கொண்மூப் போன்றவே;
கொற்றவேல் தானைக் கொடுத்திண்தேர்ச் செம்பியன்
செற்றாரை அட்ட களத்து. 23

விளக்கவுரை

போர்க்களத்தில் யானையின் நெற்றி பிளக்கப்படுகிறது. இரத்தம் ஒழுகுகிறது. அப்படியும் அந்த யானை நிமிர்ந்து நிற்கும் காட்சி செக்கர் வானத்தில் கருமுகில் இருப்பதுபோல் காட்சி தருகிறது என்று இப்பாடல் கூறுகிறது.

வெற்றி பொருந்திய வேல், சேனை, வலிமையுள்ள தேர் ஆகியவற்றைக் கொண்ட சோழன் பகைவரை கொன்ற போர்க் களத்தில் வீரர் கல் எறிந்த ஆயுதங்களால் யானைகளின் நெற்றிகள் பிளக்கப்பட்டன. அவற்றின் நெற்றியிலிருந்து இரத்தம் ஒழுகுகிறது. அந்த நிலையிலும் நிமிர்ந்து நின்ற அந்த யானைகள் செக்கர் வானத்தில் இருந்த கருமுகில் போல் காட்சி தந்தன என்ற பொருளில் இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

கொற்றம்-வெற்றி பொருந்திய. வேல் தானை-வேலையுடைய. செற்றாரை-பகைவரை. நுதல்-வெற்றி. பிளந்து-பிளத்தலால்.

தலைகள் பனங்காய்களாயின

திண்தோள் மறவர் எறியத், திசைதோறும்
பைந்தலை பாரில் புரள்பவை; - நன்(கு)எனைத்தும்
பெண்ணைஅம் தோட்டம் பெருவளி புக்(கு) அற்றே;
கண்ணார் கமழ்தெரியல் காவிரி நீர்நாடன்
நண்ணாரை அட்ட களத்து. 24

விளக்கவுரை

போர்களத்திலே வீரர்கள் வெட்டி வீழ்த்திய பகைவரின் தலைகள் தரையில் விழுந்துகிடந்த காட்சி காற்று புகுந்து கலக்கிடப் பனங்காய்கள் பக்க மெல்லாம் உருண்டு கிடப் பதைப் போல் இருந்தன என்று இப்பாடல் கூறுகிறது.

அழகு நிறைந்த மணம் வீசுகின்ற மாலையை அணிந்த, காவிரி நீர் பாயும் நாட்டையுடைய சோழன் பகைவரை கொன்ற போர்க்களத்தில் வலிய தோள்களையுடைய மறவர் வெட்டி வீழ்த்திய தலைகள் தரையில் விழுந்தன. பெருங்காற் றானது பனந்தோப்பில் புகுந்து காய்களை உதிர்த்ததைப் போல் வெட்டுண்ட தலைகள் போர்க்களத்தில் விழுந்துகிடந் தன. என்ற பொருளில் இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

கண்ணார்-அழகு நிறைந்த. கமழ் தெரியல்-மணம் வீசுகின்ற, மாலைய அணிந்த. காவிரி நீர் நாடன்-காவிரி நீர் பாயும் நாட்டை யுடைய சோழன். பைந்தலை-(வெட்டி விழும்) புதிய தலைகள்.

வானத்தை துடைப்பது போல...

மலைகலங்கப் பாயும் மலைபோல் நிலைகொள்ளாக்
குஞ்சரம் பாயக், கொடிஎழுந்து-பொங்குபு,
வானம் துடைப்பன போன்ற; புனல்நாடன்
மேவாரை அட்ட களத்து. 25

விளக்கவுரை

மலையோடு மலை பாய்வதைப் போல யானையோடு யானை போர் செய்யும் போது யானைகளின் மேல் கட்டியுள்ள அழகிய கொடிகள் வானத்தை துடைப்பது போல காட்சி தரும் என்ற பொருளில் இப்பாடல் உள்ளது.

நீர்வளப்பம் நிறைந்த நாட்டையுடைய சோழன் பகை வரை கொன்ற போர்க்களத்தில் மலையோடு மலைமோது வதைபோல் யானையோடு யானை போரிடும்போது யானை யின்மேல் கட்டியுள்ள கொடிகள் வானத்தை துடைப்பது போல் உள்ளது என்று இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

பாயும்-பாய்கின்ற. மலைபோல்-மலைகளைப் போல. நிலை கொள்ள-நிலைகொண்டு. குஞ்சரம் பாய-யானைகள் பாய்தலால். கொடி-யானைகளின்மீது கட்டப்பட்ட கொடி. பொங்குபு-விளங்குகின்ற. வானம்-வானத்தை.

நாகத்தை உண்ணும் கருடனைப் போல...

எவ்வாயும் ஓடி வயவர் துணித்திட்ட,
கைவாயில் கொண்டெழுந்த செஞ்செவிப் புன்சேவல்,
ஐவாய் விடநாகம் கவ்வி விசும்(பு) இவரும் செவ்வாய்
உவணத்தில் தோன்று; புனல்நாடன்
தெவ்வரை அட்டகளத்து. 26

விளக்கவுரை

போர்க்களத்தில் வீரர்களால் துணிக்கப்பட்ட கைகளை பருந்துகள். தூக்கிச் செல்கின்றன. அக்காட்சி அழகிய நாகத்தை ஆவலுடன் உண்பதற்கு தூக்கிச் செல்லும் கருடனை ஒத் திருந்தது என்று இப்பாடல் கூறுகிறது.

நீர்வளப்பம் நிறைந்த நாட்டையுடைய சோழன் பகை வரைக் கொன்ற போர்க்களத்தில் வீரர்கள் துணிக்கப்பட்ட கைகள் கிடந்தன. அவற்றை பருந்துகள் கௌவிக் கொண்டு செல்லும் காட்சி அழகிய நாகப் பாம்பை ஆவலுடன் உண்ப தற்கு கருடன் தூக்கிச் செல்வதைப் போல் காட்சி தருகிறது என்ற பொருளில் இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

எவ்வாயும் ஓடி-எவ்விடத்தும் சென்று. வயவர்-வீரர்கள். துளித் திட்ட-துணித்த கை. கை-கைகளை. வாயில் (தமது) வாயில் கொண்டு. புல்-மங்கிய நிறமுள்ள.

செம்பூக்கள் பூத்த சால்களைப் போல...

செஞ்சேற்றுள் செல்யானை சீறி மிதித்தலால்,
ஒண்செங் குருதிகள் தொக்(கு)ஈண்டி நின்றவை
பூநீர் வியன்றமிடாப் போன்ற; புனல்நாடன்
மேவாரை அட்ட களத்து. 27

விளக்கவுரை

போர்க்களத்தில் ரத்தம் ஆறாக ஓடுகிறது. யானைகள் மிதித்தால் பள்ளம் ஏற்படுகிறது. அந்தப் பள்ளத்தில் ரத்தம் நிரம்புகிறது. அந்த காட்சி செம்பூக்கள் பூத்த சால்கள் போல் காட்சி தருகின்றன என்று இப்பாடல் கூறுகிறது.

நீர்வளப்பமுள்ள நாட்டையுடைய சோழன் பகைவரை கொன்ற போர்க்களத்தில் பூமி ரத்த சேறாக காட்சி தருகிறது. அந்த சேற்றில் யானை கால் வைப்பதால் பள்ளம் ஏற்படுகிறது. அந்த பள்ளத்தில் இரத்தம் நிறைந்திருக்கும் அக்காட்சி செம்பூக்கள் பூத்த சால்களைப்போல் காட்சி தருவதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

புனல் நாடன்-நீர் வளப்பம் நிறைந்த நாட்டையுடைய சோழன். மேவாரை-பகைவரை. செம்சேறுஉள்-இரத்தமாகிய சேற்றில். செங்யானை-செங்கின்ற யானைகள். சீறி-வெகுண்டு.

கண்ணாடி பார்ப்பவரைப் போல...

ஓடோ மறவர் உருத்த மதம்செருக்கிப்,
பீடுடை வாளார் பிறங்கிய ஞாட்பினுள்,
கேடகத்தோ(டு) அற்ற தடக்கை, கொண்(டு) ஓடி
இகலன்வாய்த் துற்றிய தோற்றம், அயலார்க்குக்
கண்ணாடி காண்பாரின் தோன்றும்; புனல்நாடன்
நண்ணாரை அட்ட களத்து. 28

விளக்கவுரை

போரில் கேடயத்தோடு அறுப்பட்ட கைகள் பூமியில் விழுகின்றன. அக்கைகளை நரிகள் கௌவி செல்லும் காட்டி அயலில் நின்றார்க்கு கண்ணாடி பார்ப்பதைப் போல் தோன்றும் என்ற பொருளில் இப்பாடல் உள்ளது.

நீர்வளப்பம் நிறைந்த நாட்டையுடைய சோழன் பகைவரைக் கொன்ற போர்க்களத்தில் புறம் கொடாத வீரர்கள் புரிந்த போரில் கேடயத்தோடு கைகள் அறுபட்டு விழுந்தன. அந்தக் கைகளை நரிகள் கௌவிக் கொண்டு சென்றன. அயலில் நின்று அக்காட்சி பார்ப்பவர்கள் கண்ணாடிப் பார்ப்பது போல் இருப்பதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

புனல் நாடன்-நீர்வளப்பம் உடைய நாட்டினையுடைய சோழன். நண்ணாரை-பகைவரை. அட்ட-கொன்ற களத்து. ஞாட்பினுள்-போரினுள். கேடகத்தோடு அற்ற-கேடகத்தோடு அறுபட்ட.

கணவரை இழந்த காரிகைகள்

கடிகாவில் காற்(று)உற்(று) எறிய, வெடிபட்டு
வீற்றுவீ(ற்)று ஓடும் மயிலினம்போல்; - நாற்றிசையும்
கேளிர் இழந்தார் அலறுப; செங்கண்
சினமால் அட்ட களத்து. 29

விளக்கவுரை

போர்க்களத்தில் காற்று மிக வேகமாக வீசுகிறது. அதைப் பொறுக்காத மயில்கள் பயந்து என்ன செய்வதென்று அறியாமல் அகவிக் கொண்டு ஓடுகிறது. அதேபோல் போரில் இறந்த தம், தம் கணவருக்கு வருந்தி மனைவிமார்கள் அலறுவார்கள் என்று இப்பாடல் கூறுகிறது.

கோபமுடைய செங்கம் சோழன் போர் செய்த போர்க்களத்தில் மரங்கள் மிகுந்த சோலையில் காற்றானது மிக வேகமாக வீசுவதால் மயில்கள் அஞ்சி ஓடுகின்றன. அதுபோல் போரில் தங்கள் கணவன்மாரை இழந்த பெண்கள் கதறுவார்கள் என்ற பொருளில் இப்பாடல் புனையப்பட்டுள்ளது. காற்றுக்கு பயந்து மயில்கள் பயந்து ஓடுகின்றன. மயில்கள் போன்ற பெண்கள் கணவனை இழந்து கதறுவது உவமையாக கூறப்பட்டிருக்கிறது.

அ.பொ.

சினம்-கோபத்தையுடைய. செங்கண்மால்-வெங்கட்சோழன். கடிகாவில்-மரங்கள் நிறைந்த சோலையில். உறுஎறிய-மிக வேகத்தால். வெடிபட்டு-அஞ்சி. வீற்று, வீற்று ஓடும்-வேறு வேறாக ஓடும்.

மலையை மடக்கும் மழை நீர் போல...

மடங்க எறிந்து மலையுருட்டு நீர்போல்,
தடங்கொண்ட ஒண்குருதி கொல்களி(று) ஈர்க்கும்;
மடங்கா மாறமொய்ம்பின் செங்கண் சினமால்
அடங்காரை அட்ட களத்து. 30

விளக்கவுரை

மழை நீரானது மலையை மடக்கியும், தேக்கியும், உருட்டியும் வருவதைப் போல போரில் ஏற்பட்ட ரத்த வெள்ளம் யானைகளை இழுத்துச் செல்கிறது என்ற பொருளில் இப்பாடல் உள்ளது.

மடங்குதல் இல்லாத வீரமும், வலிமையும், கோபமும் கொண்ட செங்கம் சோழன் அடங்காத பகைவரை கொன்ற போர்க்களத்தில் ரத்தம் ஆறாக ஓடியது. அந்த ரத்த வெள்ளத்தில் யானைகள் இழுத்துச் செல்லப்பட்டன. அந்த காட்சி மழை நீரானது மலையை உருட்டிச் செல்வதுபோல் காட்சி தருகிறது என்ற பொருளில் இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

மடங்கா-மடங்குதல் இல்லாத. மறம்-வீரமும். மொய்ம்புஇன்-வலிமையும். அடங்காரை-பகைவரை. எறிந்து-வீசியும். உருட்டும் நீர் போல-உருட்டியும் வரும் நீரைப் போல.

மின்னற்கொடி போல...

ஓடா மறவர் எறிய, நுதல்பிளந்து,
கோ(டு)ஏந்து கொல்களிற்றுக் கும்பத்(து) எழிலோடை
மின்னுக் கொடியின் மிளிரும் புனல்நாடன்
ஒன்னாரை அட்ட களத்து. 31

விளக்கவுரை

வளப்பம் நிறைந்த நாட்டையுடைய சோழன் பகை வரைக் கொன்ற போர்க்களத்தில் புறங்கொடாத வீரர்களால் தாக்கப்பட்ட யானையின் நெற்றி பிளக்கப்படுகிறது. கொல்லப் பட்ட யானையின் நெற்றியில் அணிந்துள்ள பட்டம் தெறித்து விழுவது மின்னற்கொடி போல் காட்சி தருகிறது என்று இப் பாடல் கூறுகிறது.

சோழனுடைய வீரத்தை பறைசாற்றுவதைப் போல் போர்க்கள காட்சிகளை நம்முன் நிழற்படம் போல் காட்டி வருகிறார் பொய்கையார். கணவனை இழந்த பெண்கள் அலறல், யானைகள் அடிபட்டு விழுதல், கேடயமோடு கைகள் வீழ்தல் ரத்த சேறு, போன்றவை கற்பனை வர்ணனைகளோடு சொல்லப்படுகின்றன. மனிதனை மனிதன் அடித்து ரத்த வெள்ளம் சிந்துவது பெருமையா...? வீரமா...? கருணையா...? என்றெல்லாம் வினை எழுப்பலாம். ஆனால், உலகம் என்ற விளையாட்டு மைதானத்தில் போர்க்களங்கள் என்ற விளை யாட்டும் யுகம் யுகங்களாக நடைபெற்று வருகின்றன. இராமா யணத்திலும், மகாபாரதத்திலும் கூட போர்க்களத்திலேயே தீர்ப்பு செய்யப்பட்டது. ஆகவே, காரண காரியத்தோடு இயங்கி வரும் இந்த உலகத்தில் ஏதேனும் ஒரு வகையில் போர் இருந்து கொண்டேதான் இருக்கிறது. இவை மகிழ்ச்சிக்குரிய

செயல் இல்லை என்றாலும் இவற்றையும் நாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது அந்த தெய்வீகத்தின் திருவுளம் என்றே கொள்ள வேண்டும். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

புனல் நாடன்-நீர்வளப்பம் நிறைந்த, நாட்டையுடைய சோழன். நுதல் பிளந்து-நெற்றி பிளக்கப்பட்டு. கோடு ஏந்து-கொம்பினை ஏந்திய. கொல்களிறு-கொல்லப்பட்ட யானையின்.

போர்வை போர்த்தியது போல...

கையில்லா மேனி நிலமென்னும் நல்லவள்,
செய்யது போர்த்தாள்போல் செல்வந்தாள்; -பொய் தீர்ந்த
பூந்தார் முரசின் பொருபுனல் நீர்நாடன்
காய்ந்தாரை அட்ட களத்து. 32

விளக்கவுரை

குற்றமில்லாத பூமாலை அணிந்த, வெற்றி முரசு உடைய, நீர் நிறைந்த காவிரி உடைய நாட்டையுடைய சோழன் கோபம் கொண்ட பகைவரைக் கொன்ற போர்க்களத்தில் கொல்லப் பட்ட வீரர்களின் ரத்தம் பூமியில் பரவியது. சிவந்த நிறமுள்ள போர்வையை பூமி போர்த்திக் கொண்டதைப் போல் அக்காட்சி இருந்ததாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

வீரர்களில் உடலில் இருந்து ரத்தம் வழிகிறது. கைகள் வெட்டப்பட்டன. யானைகளின் துதிக்கைகள் வெட்டப்பட் டன என்று தொடர்ந்து போர்க்கள காட்சிகளை வர்ணனை யுடன் கூறுகிறார் பொய்கையார். வீரர்களின் உடலும் வீழ்கிறது. விலங்குகளின் உடலும் வீழ்கிறது. நரிகள் கௌவி செல்கின்றன. பருந்து, கருடன் போன்ற பறவைகள் கடித்து செல்கின்றன. ஆனால், அந்த நரிகளும், பறவைகளும் கூட ஒருகட்டத்தில் மடிகின்றன. இந்த காட்சிகளெல்லாம் நமக்கு ஏதேனும் ஒரு பேருண்மையை உணர்த்தவேண்டுமே. களவழி நாற்பது இலக்கியத்தை வாசிப்பதால் மனித சமுதாயம் ஏதேனும் பயன் பெற வேண்டாமா...? பயன் பெறத்தான் வேண்டும் காரணகாரியத்தோடு நடைபெற்றுக் கொண்டிருக் கும் இந்த உலகில் மடிவது கூட விளையாட்டுப்போல நடைபெறுகிறது. மடிவது உடல் தானே தவிர அதற்குள்ளே இருக்கும் தெய்வீக ஒளியல்ல... அந்த தெய்வீக ஒளியே பல விதங்களில் விளையாடுகிறது என்ற உண்மையை அறிந்து

இவ்விலக்கியத்தை வாசிப்பது நமக்கு பெரும் பயனைத் தந்தே தீரும். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

பொய்தீர்ந்த-குற்றமில்லாத. பூதார்-பூமாலை அணிந்த. முரசின் - வெற்றி முரசத்தையும். பொரு-அலைமோதும். புனல்-நீர். காய்ந் தாரை-வெகுண்ட எதிரிகளை.

வேல்கள் எழுப்பும் ஒலி வாளைமீன் பிறழும் வனப்பு போல...

பொய்கை யுடைத்து, புனல்பாய்ந்த வாயெல்லாம்
நெய்தல் இடையிடை வாளை பிறழ்வனபோல்;
ஐ(து)இலங்(கு) எஃகின் அவிரொலிவாள் தாயினவே;
கொய்சுவல் மாவின் கொடித்திண்தோரச் செம்பியன்
தெவ்வரை அட்ட களத்து. 33

விளக்கவுரை

ஒத்த அளவில் சுத்தரிக்கப்பட்ட கழுத்து மயிரினை உடைய குதிரைகளையும், வலிமையான தேரினையும் உடைய சோழன் பகைவரைக் கொன்ற போர்க்களத்தில் வேலோடு வேல் மோதும் ஒலி கேட்கிறது. நெய்தற் பூக்களுக்கு இடையே வாளைமீன் பிறழும் வனப்பு போல் அந்த ஒலி உள்ளது என்ற பொருளில் இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

கொய்-ஒத்த அளவில் சுத்தரிக்கப்பட்ட. கவல்-கழுத்து மயிரை யுடைய. மாஇன்-குதிரையினையும். கொடி-கொடிகட்டிய. திண்-வலிய. செம்பியன்-சோழன். அட்ட-கொன்ற. உடைந்து-கரை உடைத்தலால். புனல் பாய்ந்த-நீர் வெளிப்பட்டு பரந்த. வாய் எல்லாம்-இடமெல்லாம். நெய்தல்-நெய்தல் பூக்களின்.

குடர் இழுக்கும் குறுநரி

இணரிய ஞாட்பினுள் ஏற்(று)எழுந்த மைந்தர்,
சுடர்இலங்(கு) எஃகம் எறியச்சோர்ந்(து) உக்க,
குடர்கொண்டு வாங்கும் குறுநரி கந்தில்
தொடரொடு கோணாய் புரையும்; அடர்பைம்பூண்
சேய்பொரு(து) அட்ட களத்து. 34

விளக்கவுரை

போர்க்களத்தில் வீரர்கள் வயிற்றில் வேல் பாய்கிறது. குடல் சரிகிறது. அக்குடரைக் குள்ளநரி இழுக்கும் காட்சி தூணில் சங்கிலியால் கட்டுண்ட வேட்டை நாயை ஒத்திருக் கிறது என்று இப்பாடல் கூறுகிறது.

பொன் அணி மணிகளை அணிந்த சோழன் போர் செய்து பகைவரை கொன்ற போர்க்களத்தில் வீரர்கள் வயிற்றில் வேல் பாய்ந்தது. குடல் சரிந்தது. அந்தக் குடரை குள்ள நரி இழுத்துச் செல்லும் காட்சி தூணில் சங்கிலியால் கட்டிய வேட்டை நாய் போல் இருந்தது என்று இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

அடர்-நெருங்கிய. மைப்பூண்-பொன் அணிகளை மார்பில் அணிந்த. சேய்-சோழன். பொருது-போர் செய்து. அட்ட-கொன்ற. களத்து-போர்க்களத்தில். இணரிய-நெருங்கிய. ஞாட்பிறுளி-போரில். அடர் இலங்கு-ஒளி விளங்குகின்ற.

அரசரோடு யானைகள் அழிந்தொழிந்த காட்சி

செவ்வாரைச் சென்னி அரிமானோ(டு) அவ்வரை
ஒல்கி உருமிற்(கு) உடைந்தாற்றல்; - மல்கிக்
கரைகொன்(று) இழிதரூஉம் காவிரி நாடன்
உரைசால் உடம்பிடி மூழ்க அரசோ(டு)
அரசுவா வீழ்ந்த களத்து. 35

விளக்கவுரை

போரில் அரசனோடு யானைகள் அழிந்த காட்சியை நிழற்படம் போல் தருகிறார் கவி. அது எப்படி இருந்தது என்றால் சிங்கம் சுமந்த மலை இடி விழ சிங்கமும், மலையும் சிதறியது போல் இருந்ததாம். இதனை உணர்த்தும் பாடல் இது.

நீர் மிகுந்து கரைகளை அழித்துச் செல்லும் காவிரி நாட்டையுடைய சோழன் வென்ற போர்க்களத்தில் அரசரோடு அரசர் மோதினர். அப்போது பகை அரசர் யானைகளோடு சேர்ந்து வீழ்ந்த காட்சி சிங்கம் சுமந்த மலை இடி விழுந்து சிங்கமும், மலையும் சிதறியது போல் இருந்ததாம். இதனை உணர்த்தும் பாடலாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

மல்கி-நீர் மிகுந்து. கரை-கரைகளை. கொன்று-அழித்து. இழி தரும்-செல்லும். உரைசால்-புகழ் அமைந்த. உடம்பிடி-வேர்கள். மூழ்க-உட்பாய்தலால்.

குடைகள் சாய்ந்திருக்கும் காட்சி...

ஓஒ உவமன் உறழ்வின்றி ஒத்ததே
காவிரி நாடன் கழுமலம் கொண்டநாள்
மாஉதைப்ப, மாற்றார் குடையெல்லாம் கீழ்மேலாய்,
ஆஉதை காளாம்பி போன்ற; புனல்நாடன்
மேவாரை அட்ட களத்து. 36

விளக்கவுரை

போர்க்களத்தில் குதிரைப் படைகள் வெண் கொற்றக் குடைகள் சாயும்படி உதைக்கின்றன. அந்தக் குடைகள் சாய்ந் திருக்கும் காட்சி ஆ இடறக் கிடக்கும். அருங் காளானைப் போல் இருந்தது என்கிறது இப்பாடல்...

காவிரி பாயும் நாட்டையுடைய சோழன் கழுமலம் என்ற ஊரினை கை கொண்ட நாளில் அச்சோழன் பகைவரை அழித்த போர்க்களத்தில் பகைவரின் குடைகளையெல்லாம் குதிரைப் படைகள் உதைத்து கீழே தள்ளின. அந்த குடைகள் சாய்ந்திருக்கும் காட்சி ஆ இடறிக் கிடக்கும் காளானைப் போல் காட்சி தந்தது என்று இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

காவிரி நாடன்-காவிரி பாயும் நாட்டையுடைய சோழன். கழுமம் கொண்ட நாள்-கழுமலம் என்றும் ஊரினை கைக்கொண்ட நாளில். புனல் நாடன்-அச்சோழன். மேவாரை-பகைவரை. அட்ட-கொன்ற. மாஉதைப்ப-குதிரைகள் உதைத்தலால். மாற்றார்-பகைவரின். குடை யெல்லாம்-குடைகள் எல்லாம்.

அலை இழுக்கும் தோணி போல...

அரசர் பிணம்சான்ற நெய்த்தோர், முரசொடு
முத்துடைக் கோட் களி(று)ஈர்ப்ப; - எத்திசையும்
பௌவம் புணர்அம்பி போன்ற புனல்நாடன்
தெவ்வரை அட்ட களத்து. 37

விளக்கவுரை

போர்க்களத்தில் வீழ்ந்த வீரர்கள் கக்கிய ரத்தம் முரசங் களோடு யானையை இழுத்துச் செல்கிறதாம். அந்த காட்சி கடல் அலைகள் தோணியை இழுத்துச் செல்வதைப் போல் இருந்ததாகப் இப்பாடல் கூறுகிறது.

நீர்வளப்பம் நிறைந்த நாட்டையுடைய சோழன் பகை வரை கொன்ற போர்க்களத்தில் படை வீரர்கள் போரிட்டு வீழ்ந்தார்கள். அவர்கள் கக்கிய ரத்தம் மரசங்களையும், யானைகளையும் இழுத்துச் செல்கிறது. அந்தக் காட்சி கடல் அலைகள் தோணியை இழுத்துச் செல்வதைப் போல காட்சி யளிப்பதாக இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

புனல் நாடன்-நீர்வளப்ப நிறைந்த நாட்டையுடைய சோழன். தெய்வரை-பகைவரை. அட்ட-கொன்ற. களத்து-போர்க்களத்திடத்தின் கண். அரசர்-அரசர்களின். பிணங்கள்-பிணங்களானது. கான்ற-சிந்திய. நெய்த்தோர்-இரத்தம். எத்திசையும்-எல்லா திசைகளிலும். முரசோடு-முரசங்களுடன்.

இடியொலியால் புரளும் பாம்பு போல்

பருமப் பணைஎருத்தின் பல்யானை புண்கூர்ந்(து)
உரும்எறி பாம்பின் புரளும்; - செருமொய்ம்பின்
பொன்ஆரம் மார்பின் புனைகழற்கால் செம்பியன்
துன்னாரை அட்ட களத்து. 38

விளக்கவுரை

போர்க்களத்தில் போர் யானை மீது வேல் பாய்கிறது. அதனால் யானையின் உடல் புண்ணாகிறது. அந்தப் புண்ணின் வலி தாங்க முடியாத யானை தரையில் விழுந்து புரளுகிறது. அந்தக் காட்சி இடியொலி கேட்டு புரளும் பாம்பு போல இருந்ததாக இப்பாடல் கூறுகிறது.

பொன்னாலான மாலைகளை அணிந்த மார்பினையும், வீரக் கழல் அணிந்த சோழன் பகைவரை கொன்ற போர்க் களத்தில் பருத்த பிடறியினையுடைய பல யானைகள் வேலால் தாக்கப்பட்டு புண்பட்டு விழுந்தன. அந்த வலி தாங்க முடியா மல் மண்ணில் புரளுகின்றன. அந்தக் காட்சி இடியொலி கேட்ட பாம்பு பயந்து புரள்வதைப் போல் இருந்ததாக இப் பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

செரு-போர். மொய்ம்புஇன்-வலியினையும். பொன்ஆரம்-பொன்னாலாகிய மாலைகளை அணிந்த. மார்பின்-மார்பினையும். புனை-கட்டிய. கழுங்கால்-வீரக்கழல் விளங்கும் காலினையுடைய.

வெண்குடை செங்குடையானது

மைந்துகால் யாத்து மயங்கி ஞாட்பினுள்,
புய்ந்துகால் போகிப் புலால்முகந்த வெண்குடை,
பஞ்சிபெய் தாலமே போன்ற; புனல்நாடன்
வஞ்சிக்கோ அட்ட களத்து. 39

விளக்கவுரை

போர்க்களத்தில் வெண்குடைகள் சாய்க்கப்பட்டன. அந்த குடைகள் இரத்தத்தில் தோய்ந்து செங்குடை போல் காட்சி தந்தன என்று இப்பாடல் கூறுகிறது.

நீர் நிறைந்த வளம் நிறைந்த நாட்டையுடைய சோழன் வஞ்சி நாட்டரசனை கொன்ற போர்க்களத்தில் வெண் கொற்றக் குடைகள் சாய்க்கப்பட்டன. அந்த குடைகள் ரத்தத்தில் தோய்ந்து செங்கடைகளாக மாறி காட்சியளித்தன என்று இப்பாடல் புனையப்பட்டிருக்கிறது.

கொங்கு நாட்டவர், வஞ்சி நாட்டவர் ஆகியவரை சோழன் வென்றதை களவழி நாற்பது கூறுகிறது. வெண் கொற்ற குடைகள் சாய்ந்தன. அரசர்கள் வீழ்ந்தனர். படை வீரர்கள் ரத்தம் கக்கினர். கைகள் துண்டாயின. ரத்தம் வெள்ளம் போல் ஓடியது. யானைகளை இழுத்துச் சென்றது அந்த ரத்த வெள்ளம். இப்படி இரத்தம் வடிந்த காட்சிகளை நரி, பருந்து, கருடன், பாம்பு போன்றவற்றோடு இணைத்து கற்பனை நயத்தோடு கவி தந்திருக்கிறார். இந்த போர்க்களக் காட்சிகளை நிழற்படம் போல் தந்திருக்கிறார் ஆசிரியர் கற்பனை வர்ணனைகள் பிரமாதமாக உள்ளன.

இந்த காட்சிகளை நம் முன் கொண்டு வந்து வாசிக்க வைத்ததில் இந்த மனித சமுதாயத்திற்கு என்ன நன்மை? முற்காலத்தில் நடந்த போர்க்களத்தில் என்னென்ன நிகழ்ந் தன என்பது இப்போது வாழும் மக்களுக்கு செய்தியாக தெரி

யுமே தவிர நேரடியாக பார்த்ததில்லை. போரில் ஒருவரை யொருவர் தாக்கி பல தலைகள் உருண்டிருக்கின்றன. ரத்தம் வெள்ளமாக ஓடியிருக்கிறது என்பதை யெல்லாம் நாம் அறியும்படி செய்தது எதற்காக என்ற வினாவை எழுப்பு கிறோம். அசோக சக்கரவர்த்தி போர்க்களத்தில் கணவனை இழந்த பெண்கள், கைவேறு, கால்வேறாக துண்டிக்கப்பட்ட காட்சிகளை காண்கிறான். அவன் மனத்தில் கருணையும், இரக்கமும் தோன்றுகிறது. கண்ணீர் வடிக்கிறான்.

இனி போர் செய்வதில்லை என்று சபதம் செய்கிறான். போர்க்கள காட்சியை காண்பதால் இந்த மனமாற்றம் அசோக சக்கரவர்த்திக்கு வந்ததாக வரலாறு சொல்கிறது. அதேபோல் தமிழரின் வீரத்தை போர்கள் பறைசாற்றினாலும் எல்லோரும் மனித வர்க்கம் தான். நம் சகோதரர்களே. இந்த உணர்வு வர வேண்டும். எதிர்காலத்தில் இப்படியெல்லாம் போர்புரிந்து எவரும் இரத்தம் சிந்தக் கூடாது. சமாதானத் துடன் வாழ வேண்டும் என்ற நல்ல சிந்தனையை நம் அனை வருக்கும் உருவாக்க வேண்டும் என்ற திருவுளத்தால் எங்கும் நிறைந்த தெய்வீக சக்தி பொய்கையாரை இப்போர் இலக் கியத்தை படைக்க வைத்திருக்கிறது என்று கூறினால் அது மிகை இல்லை.

அ.பொ.

ம

பூமியை உழுவதைப் போல...

வெள்ளிவெண் நாஞ்சிலால் ஞாலம் உழுவனபோல்,
எல்லாக் களிறு நிலம்சேர்ந்த; பல்வேல்
பணைமுழங்கு போர்த்தானைச் செங்கண் சினமால்
கணைமாரி பெய்த களத்து. 40

விளக்கவுரை

போர்க்களத்தில் அம்புகள் மழை போல் யானைகள் மேல் பாய்கின்றன. அந்த யானைகள் கொம்புகளைக் குத்திக் கொண்டு பூமியில் விழுந்து கிடக்கும் காட்சி வெள்ளி உழு படையால் நிலத்தை உழுவதைப் போல் காட்சியளித்து என்று இப்பாடல் கூறுகிறது.

வேல் ஒலியோடு முரசு முழங்குகின்ற போர்படையும், சினமும் கொண்ட செங்கம் சோழன் போர் புரிந்த போர்க் களத்தில் அம்புகள் மழைபோல் பொறிந்தன. அந்த அம்புகள் பட்டு யானைகள் விழுந்தன. அவை கொம்புகளை குத்திக் கொண்டு பூமியில் விழுந்து கிடந்த காட்சி வெள்ளி உழுபடை யால் நிலத்தை உழுவதுபோல் இருந்தது என்று இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

அ.பொ.

பல்வேல்-பலவேல் ஒலியோடு. பணைமுழங்கு-முரசு முழங்குகின்றன. போர்த்தானை-போர்ப்படையையும். கணைமாரி-அம்பாக மழையை.

வேதங்கள் கேட்ட யானைகள்

வேல்நிறத்(து) இங்க, வயவரால் ஏறுண்டு
கால்நிலம் கொள்ளாக் கலங்கிச் செவிசாய்த்து,
மாநிலம் கூறு மறைகேட்ப போன்றவே;
பா(டு)ஆர் இடிமுரசின் பாய்புனல் நீர்நாடன்
கூடாரை அட்ட களத்து. 41

விளக்கவுரை

போர்க்களத்தில் யானைகளின் மேல் வேல்கள் பாய்கின் றன. வீரர்கள் அந்த யானைகளின் மேல் ஏறி வேலினால் குத்து கிறார்கள். அந்த யானைகள் கால் தள்ளாடி நிலத்தில் விழுகின் றன. அப்போது நிலமகள் நான்கு வேதங்களைக் கூற அந்த யானைகள் அதை கேட்டதாக இப்பாடல் கூறுகிறது.

ஒளி நிறைந்த இடி போன்ற முரசினையும், நீர் நிறைந்த காவிரி நாட்டினையுடைய சோழன் பகைவரைக் கொன்ற போர்க்களத்தில் யானைகள் மீது வேல்கள் பாய்ந்தன. படை வீரர்கள் அந்த யானைகளின்மேல் ஏறி வேலால் குத்தினார்கள். அதனால் துன்பம் அடைந்த யானைகள் கால் தள்ளாடி நிலத்தில் விழுகின்றன. அப்போது நிலமகள் ஆறுதலாக வேதங்களை உரைக்க அந்த யானைகள் அதைக் கேட்டதாக கவி கூறுகிறார். வேதங்கள் என்ன சொல்லியிருக்க வேண்டும்? நீங்கள் கவலைப்படவேண்டாம். விழுந்தது உங்கள் உடல்கள்

தான். நீங்கள் இந்த உடல்கள் அல்ல. அழியாத தெய்வீக ஒளிகள். இங்கே நீங்கள் வீர மரணம் அடைகிறீர்கள். உடல்கள் இறப்பதால் நீங்கள் இறந்ததாக அர்த்தமல்ல. இந்த வீர மரணத்தின் காரணமாக அடுத்த பிறவியில் மிகச் சிறந்த பிறவியைப் பெறுவீர்கள் என்று தானே சொல்லியிருக்க முடியும்.

வேதங்களின் சாரமே இதுதான். இறந்த யானைகளுக்கு மட்டுமல்ல. இறந்த படை வீரர்கள், இறந்த அரசர்கள், இறந்த குதிரைகள் எல்லாமே வீர மரணத்தின் காரணமாக வீர சுவர்க்கத்தையே அடையும் எனச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, ஆசிரியர் இந்த பாடலில் வேதத்தை இணைத்ததால் வாசகர்களுக்கு ஒரு அருமையான ஞானத்தை நினைவுபடுத்தியிருக்கிறார் என்றே சொல்ல வேண்டும். உயிர் விடும் நேரத்தில் பூமி தேசியின் மடியில் யானைகள் விழுகின்றன. பூமி தேவி அந்த சமயத்தில் வேதங்களை கூறுகிறாள். நீங்கள் வருந்த வேண்டாம். உடல் அழியும் ஆத்மா அழியாது. நீங்கள் அழியாத ஆத்மாக்கள் என்று தன் குழந்தைகளுக்கு அவள் ஆறுதல் கூறுகிறாள்.

உறவினர்களையும், நண்பர்களையும் கொல்லமாட்டேன் என்று பின்வாங்கிய அருச்சுனனுக்கு பகவான் ஸ்ரீகிருஷ்ணன் இந்த வேதத்தைத் தானே கூறினார்? அருச்சுனா... நீ உடலைத் தான் வீழ்த்தப் போகிறாய். ஆத்மாவை உன்னால் எதுவும் செய்ய முடியாது. அந்த ஆத்மாவை நெருப்பு எரிக்காது நீர் நினைக்காது. காற்று உலர்த்தாது. வாள் வெட்டாது என்று தானே கூறினார். இவ்விலக்கியம் முடியும் தருவாயில் ஆசிரியர் வேதங்களை நுழைத்திருப்பது மிகவும் பயன்தரக்கூடியவையாக அமைந்து விட்டது. விளக்கவுரையில் எல்லாவற்றையும் தெய்வீகத்துடன் இணைக்க வேண்டும் என்று நாம் கூறி வருவது இதனையொட்டியே ஆகும். இச்சிந்தனைகளைத் தூண்டும் விதத்தில் இப்பாடல் அமைந்துள்ளது.

அ.பொ.

பாடுஆர்-ஒலி நிறைந்த. இடி-இடி போன்ற. முரசின்-முரசினையும். பாய்புனல்-நீர் நிறைந்த. கூடாரை-பகைவரை. இங்க-அமுந்த. வயவர்-வீரரால். ஏறுண்டு-குத்தப்பட்டு.

திங்களும்... அதன் களங்கமும்

படைப்பொலிதார் மன்னர் பரூஉக்குடர் மாந்திக்
குடைப்புறத்துத் துஞ்சும் இகலன்-இடைப்பொலிந்த
திங்களில் தோன்றும் முயல்போலும் செம்பியன்
செங்கண் சிவந்த களத்து. 42

விளக்கவுரை

போர்க்களத்தில் பகை மன்னர்களின் குடல்கள் சரிந்தன. அந்தக் குடலை தின்று வெண்குடையின் கீழ் நரி உறங்கும் காட்சி திங்களும், அதன் களங்கத்தையும் நினைவுப்படுத்துவதாக இப்பாடல் கூறுகிறது.

சோழனுடைய கோபத்தால் பகை அரசர்கள் வீழ்ந்தனர். அந்த அரசர்களின் குடல்கள் சரிந்தன. அக்குடரை நரிகள் தின்று வெண் கொண்டைகள் அருகே உறங்குவது சந்திரனும் அதில் உள்ள களங்கமும் போல காட்சி தருகிறது என்று இப்பாடல் புனையப்பட்டுள்ளது.

இதுவரை களவழி நாற்பது பாடல்களுக்கு வாசகர்கள் பயன்பெறும் வகையில் விளக்கவுரை வழங்கப்பட்டிருக்கிறது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம். விளக்கவுரையின் லட்சியம் எல்லாவற்றையும் தெய்வீகமாக முன்னிறுதிக் கொண்டு வாசியுங்கள் என்பதை மீண்டும், மீண்டும் நினைவு படுத்துகிறோம்.

அ.பொ.

செம்பியன்-சோழனுடைய. செங்கண்-சிவந்த கண்கள். சிவந்த-கோபத்தால் மேலும் சிவந்திடும். களத்து-போர்க்களத்திடத்தமூ படைப் பொலிதார்-போர்க்குரிய அடையாள மாலையை அணிந்துள்ள மன்னர். பருகுடல்-பருத்த குடல்களை. மாந்தி-தின்று. குடைப்புறத்து-வீழ்ந்துகிடக்கும் வெளிச்சக்கரக் குடைகளின் வெளிப்புறத்து.

❒ ❒ ❒

திருமதி.அம்சவேணி பெரியண்ணன்

“திருக்குறளை மக்களிடம் பரவலாக எடுத்துச் செல்வதில் புதிய முறையைக் கையாண்டவர். திருக்குறளை ஓலைச்சுவடிபோல் பதிப்பித்தும் திருமணப் பரிசாகவும் நண்பர்களுக்கு அன்பளிப்பாக வழங்கும் பழக்கத்தை அறிமுகப்படுத்தியவர். வாழ்க்கைத் துணைநலம் என்ற வள்ளுவர் பெருந்தகையின் கருத்துக்கு இலக்கணமாக வாழ்ந்தவர் திருமதி.அம்சவேணி பெரியண்ணன்.”

– சுதந்திரப் போராளி தோழர்.இரா.நல்லகண்ணு

மூத்த தலைவர், தேசியக் குழு உறுப்பினர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி

“நூல்களுக்காக வாழ்ந்தவர் இப்போது நூலாகவே வாழ்கிறார்! அந்தக் காலத்தில் பாடப்புத்தகங்களைத் தாண்டி பல்வேறு துறைகள் சார்ந்த புத்தகங்களை அச்சிட்டு, அனைவரையும் படிக்க வைத்தார். ஒரு பெண்மணி என்றால் நம்ப முடிகிறதா? அந்த சாதனையைப் படைத்தவர்தான் அம்சவேணி பெரியண்ணன். சாதனைப் பெண்மணி அம்சவேணி பெரியண்ணன் பல விஷயங்களில் முதல்வர்.”

– மருத்துவர் அன்புமணி இராமதாஸ்

தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர்

“பதிப்பகத்துறையில் முதல் பெண்மணி என்னும் மகுடம் தரித்தவர் திருமதி.அம்சவேணி பெரியண்ணன். ஒரு பெண் பதிப்பாளராக 1000 நூல்களை வெளியிட்டுள்ளார் என்பது வியக்கத்தக்க ஒன்றாகும். பதிப்பகத் துறையில் முதல் பெண்மணி என்னும் மகுடம் தரித்தவர் வனிதா பதிப்பகம் திருமதி.அம்சவேணி பெரியண்ணன் அவர்கள். பெண்ணுலகின் அணிகலனாக ஒளிரும் அம்மையாருக்கு நன்றி!”

- கி.வீரமணி

தலைவர், திராவிடர் கழகம்

“நான் எழுதிய மக்களிசைப் பாடல்கள், பழமொழிக் கதைகள், சிறுவர் பாடல்கள் போன்ற பல்வேறு நூல்களை வெளியிட்டு என்னை எழுத்தாளராக உயர்த்தியவர். என் மனைவி அனிதா குப்புசாமி அவர்களுடன் ஏற்பட்ட நெருங்கிய பழக்கத்தில் அவர்கள் செய்கின்ற சமையல்களைப் பார்த்து ‘ஏன் நீங்கள் சமையல் நூல்கள் எழுதக் கூடாது’ எனக் கேட்டு உயர்தரமிகு சைவ சமையல், டிபன் சமையல், இனிப்பு வகைகள் போன்ற பல்வேறு நூல்களை வெளியிட்டு பெருமைப்படுத்தியவர். பதிப்புத்துறையில் இவர் செய்த சாதனைகள் எண்ணிலடங்கா.”

– கலைமாமணி முனைவர் புஷ்பவனம் குப்புசாமி,

கிராமிய இசைக் கலைஞர்.